# துருவன்

அல்லது

## 'விடா முயற்சியே வெற்றிக்கு வழி'

வித்துவான்

மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

இயற்றியது

பிரசுரகர்த்தர்:

பி. ஜி. பால் அண்டு கம்பெனியார்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை.

பதிப்புரிமை]

[விலை அணா 8

ஆரும் பதிப்பு, ஏப்பிரல் 1948,

PRINTED AT THE LIBERTY PRESS G.T. MADRAS.

# பொருளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| | அணிந்துரை | .... | .... | v |
| 1. | நாட்டுச் சிறப்பு | .... | .... | 1 |
| 2. | மன்னன் திருமணம் | .... | .... | 5 |
| 3. | மக்கட்பேறு | .... | .... | 8 |
| 4. | மைந்தன் மனத்துயர் | .... | .... | 12 |
| 5. | நாரதர் தரிசனம் | .... | .... | 16 |
| 6. | மன்னனும் மாதவரும் | .... | .... | 25 |
| 7. | கடவுள் தோன்றுதல் | .... | .... | 30 |
| 8. | துருவன் நகருக்கு வருதல் | .... | .... | 38 |
| 9. | உத்தானபாதன் துறவு | .... | .... | 41 |
| 10. | துருவன் திருமணம் | .... | .... | 46 |
| 11. | உத்தமன் மரணம் | .... | .... | 48 |
| 12. | துருவன் பதம் பெறுதல் | .... | .... | 53 |
| | செய்யுள் அருஞ்சொற்குறிப்பு | | .... | 59 |
| | வசன அரும்பத அகராதி | .... | .... | 63 |
| | உரிமையுரை .... | .... | .... | 65 |

# அணிந்துரை

மாந்தரை மேன்மையடையச் செய்தற்குரிய கருவி கல்வியே. மக்களுக்கு,

> 'குஞ்சி அழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
> மஞ்சள் அழகும் அழகல்ல;—நெஞ்சத்து
> 'நல்லம்யாம்' என்னும் நடுவு நிலைமையாற்
> கல்வி அழகே அழகு.'

செல்வப் பொருளினும் கல்விப்பொருள் உறுதி பயப்ப தாகும். 'கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி.' கல்வியில்லாதார், அறிவின் விளக்கம் பெறுமல்,

> 'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூற்
> கற்ருரோ டேனை யவர்.' —திருவள்ளுவர்

என்றபடி, அறிஞர்களுக்கு முன் விலங்குகளை ஒப்பதொரு நிலையை அடைவர். ஆதலின், யாவரும் தம் மக்கட்குக் கல்வியைக் கற்பித்தல் வேண்டும்.

ஆனல், கல்வியைக் கற்பிப்பதில் நாம் கவனித்தற் குரிய இன்றியமையாத விடயமொன்று உளது. அது பிள்ளைகட்கு அறிவை வளர்க்கும் நூற்களைக் கற்பித்தலோடு, அவர்கள் மனத்தைச் செம்மைப்படுத்தி, அவர்கள் நல்லொழுக்கமுடையவர்களாகும்படி செய்தற்குரிய நீதி நூற்களை இளமையிலேயே அவர்கட்குக்கற்பித்தலே. அங்ஙனஞ் செய்தலால் விளையும் நற்பயன் மிகவும் பெரியதாகும். நீதிகளைக் கதைகளின் மூலமாகப் போதிப்பின்

பிள்ளைகள் அவற்றை விரும்பிக் கற்பார்கள். அன்றியும், அத்தகைய நூற்களைக் கற்கவேண்டுமென்னும் அவா அவர்களுக்கு மேன்மேலெழும். துருவனது கதை அங்ஙனம் போதித்தற்குரிய சிறந்த நீதிக் கதைகளுள் ஒன்றாகும். இது பாகவத புராணத்தில் நாலாம் கந்தத்திற் கூறப்பட்டிருக்கிறது. இக்கதையினால், 'குன்றாத ஊக்கம், இடைவிடா முயற்சி, கடவுள் பத்தி என்னும் இவற்றையுடையார், உன்னத நிலையினை அடைவார்,' என்பதும், 'பல மனைவியரை மணப்பவர், பேரரசராயிருப்பினும், துன்புறுவர்,' என்பதும் நன்கு விளங்கும்.

திருவாளர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்கள், இக்கதையைத் தமிழில் இக்காலத்திற்கேற்ற வண்ணம் எழுதியிருக்கின்றனர். இக்கதையில் முன்பமைந்திருந்த சுவையினும் பன்மடங்கு அதிகமான சுவை தோன்றும்படி இவர் இதனை எழுதியிருக்கின்றார். இந்நூலின் நடை யாவரும் படித்துணர்ந்து களிகூரும்படி, எளிமையும் இனிமையும் அமையப் பெற்றிருக்கின்றது. இவர் இக்கதையில் அந்த அந்த இடங்களுக்கேற்ற சில அணிகளை அமைத்திருக்கின்றார். 'அணியுள்ள கவிதை, பணியுள்ள வனிதை,' அல்லவா? பணியுள்ள வனிதையின் தோற்றம் பார்ப்பவர்களது கண்களைக் கவர்வதுபோல, இந்நூலும் படிப்பவர்கள் மனத்தைக் கவரும் என்பதில் ஐயமின்று.

கா. ர. கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன் உயர் கலாசாலைத்
தலைமைத் தமிழ்ப் புலவர்.

சென்னை,
22.3.'22.

# துருவன்

அல்லது

## 'விடா முயற்சியே வெற்றிக்கு வழி'

### 1. நாட்டுச் சிறப்பு

கடவுளால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தைப் பேரறிவாளர் சில பகுதிகளாகப் பகுத்திருக்கின்றனர். அப்பகுதிகளுள் ஆசியாக்கண்டம் என்பது ஒன்று. அது மிகவும் பரந்து சுருண்டு வரும் திரைகளையுடைய கடலாற் சூழப்பட்டுள்ளது. அதன் தென்புறத்தில் முக்கோண வடிவினையுடைய ஒரு நிலப்பகுதி கடலில் நீண்டிருக்கிறது. அஃது அவ்வாறு நீண்டிருத்தல் தன் பெருமையைப் பிற தேசங்களுக்குத் தெரிவிக்கக் கருதி, முன்னோக்கி வருவதுபோலக் காணப்படுகின்றது. இந் நிலப் பகுதிக்கு இந்தியா என்பது பெயர். இது கல்விப் பொருட்டும், செல்வப் பொருட்டும் ஒரு பேழையென விளங்குவதாகும். இதனிடத்தில் முதன்முதல் பல சிறந்த புலவர்களும், வல்லமையிற் சிறந்த வீரர்களும் தோன்றி, அரும்பெருஞ் செயல்களைச் செய்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்நாட்டில் முதன் முதல் நாகரிகம் என்னும் மரம் தோன்றிற்று. அது பிறகு மாந்தர்களுடைய ஒழுக்கம் என்னும் நீரினால் வளர்க்கப்பட்டு வந்தது. மிகவும் ஓங்கி வளர்ந்த அம்மரத்தில் மதங்களாகிய கிளைகள் பல படர்ந்து விளங்கின. அவற்

றில் அன்பு என்னும் நறுமலர் தோன்றிற்று. அவ்வாறு தோன்றிய மலர், தன் நறுமணத்தைப் பல பக்கங்களி லும் வீசத் தொடங்கிற்று. அம்மரத்தையும், அஃது உண்டாதற்கு ஒரு நிலத்தையும் ஏற்படுத்தியவர் யார்? அவர்தாம் நம்மெல்லாரையும், மற்றுமுள்ள உயிர்கள் எல்லாவற்றையும் படைத்துக் காத்து, அழிக்குங் கடவுள்.

இந்நாட்டுக் குடிகளுக்குக் 'கடவுள் ஒருவர் உண்டு,' என்பதும், 'அவரை ஒவ்வொருவரும் தொழவேண்டும்,' என்பதும் அழியாத நோக்கமாகும். ஆகையினாற்றான் இவர்கள் எந்தக் காரியத்தைச் செய்யப் புகுந்தாலும், முன்பு கடவுளைத் தொழுதே, பின்பு அக்காரியத்தைத் தொடங்குகிறார்கள். இதனாலிந்நாடு பத்தியிற் சிறந்த நாடாயிற்று. இந்நாட்டிற் பிறந்தவர்களுட் பலர், தம் முடைய மன மொழி மெய்களால் கடவுளைச் சிந்தித்துத் துதித்துத் தொழுது, நன்னெறியைப் பின்பற்றியொழுகி, நற்பதவியைப் பெற்றிருக்கின்றனர். அவர்களை இத் துணைப் பெயர் என்று கணக்கிட்டுக் கூறல் இயலாது. ஆனபோதிலும், அவர்களுட் சிலருடைய சரித்திரத்தை அறிவிற் சிறந்த புலவர்கள், பிற்கால மக்களுக்குப் பெரு நலமளித்தற்கென எழுதி வைத்திருக்கின்றார்கள்.

இந்நாட்டில் பல இராச்சியங்கள் உண்டு. அவை களுள் வடமதுரை என்பது ஒரு சிறந்த இராச்சியம். அதற்கு 'மட்ரா' என்னும் மற்றொரு பெயரும் உண்டு. அந்த இராச்சியம் இந்தியாவின் வடக்கில் யமுனை* நதிக் கரையில் இருக்கிறது. அதனிடத்தில் பல வளங்களும் சிறந்து காணப்படும்.

---

* The River *Jamna*.

யமுனை யாற்றிற்குக் காளிந்தி என்னும் மற்றொரு பெயரும் உண்டு. அதனுடைய நீரின் பெருக்கால் அந்த இராச்சியம் முழுவதும் செழிப்புற்று விளங்குகின்றது. அவ்விராச்சியத்தைப் புலவர்,

'நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ,
நிறைநெடு மங்கல நாணோ,
இலகுநன் மார்பின் ஆரமோ, உயிரின்
இருக்கையோ, மலர்மகட் கினிய
மலர்கொலோ, மாயோன் மார்பினன் மணிகள்
வைத்தபொற் பெட்டியோ, வானோர்
உலகின்மேல் உலகோ, ஊழியின் இறுதி
உறையுளோ, யாதென வுரைப்பாம்!'

—கம்ப நாடர்

என்று சிறப்பித்துக் கூறுவர்.

வடமதுரைக்கருகில் பாயும் யமுனை யாற்றங்கரையில் சிறந்த சோலையொன்று உண்டு. அப்பொழிலில் பல வகைப்பட்ட மலர் மரங்களும், வாழை, மா, பலா முதலிய கனி மரங்களும் அடர்ந்திருக்கும். அப்பொழிலில் அவ்வாறு பல மரங்களடர்ந்திருத்தலால், சூரிய வெப்பம் அதனுட்புறத்தில் புகுவதில்லை. ஆகையினால், அச்சோலையில் எப்பொழுதும் குளிர்ச்சி குடிகொண்டிருக்கும்; மலர்களிலுள்ள தேனை அருந்திய வண்டுகள், மிகுந்த களிப்போடு ரீங்காரம் செய்யும் வண்டுகள் அவ்வாறு ரீங்காரஞ்செய்தல், சுருதி கூட்டுவதை ஒத்திருக்கும். குளிர்ந்த அச்சோலையின் மரக் கிளைகளில் குயில்கள் அமர்ந்து, இனிய ஓசையுடன் பாடும். அவைகள் பாடுவது, இசையில் வல்ல பாடல் மகளிர் பாடுவதை ஒத்திருக்கும். ஒரு புறத்தில் மயில்கள் தங்கள்

தோகையை விரித்து, நடனமாதர்களைப்போல, வெகு அழகாக ஆடும். மற்றொரு புறத்தில் சில குரங்குகள் அமர்ந்து, நாடகம் பார்க்கும் மாந்தரைப்போல, அம் மயில்கள் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருக்கும். யமுனை யாற்றின் கரையில் தாமரைக் கொடிகள் இலைகளுடன் படர்ந்து மலர்களைத் தாங்கும் காட்சி, மரகதத்தாற் செய்யப்பட்ட வட்டத்தட்டுகளில் கற்பூரக் கட்டிகள் எரிந்துகொண்டிருப்பதைப்போல இருக்கும். வெள்ளிய சிறகையுடைய அன்னப் பறவைகள், கரையோரத்தில் இங்குமங்கும் உலவிக்கொண்டிருக்கும். அவை அவ்வாறு உலவுதல், வெள்ளிய ஆடையுடுத்த கன்னிப் பெண்கள் உலவிக்கொண்டிருப்பதுபோல இருக்கும். மலர் மரங்கள் பல நிறப்பூக்களை உதிர்க்கும் தோற்றம், பெண்களின் ஆடல் பாடல்களைச் சபையில் கண்டு களிக்கும் வள்ளல்கள், அவர்களுடைய திறமைக்கு அதிசயித்து, அவர்களுக்குப் பொன்னும் மணியும் அளிப்பதை ஒத்திருக்கும். அச்சோலையில் தவழும் தென்றற் காற்று, பல வகை மலர்களின் மணத்தைக் கவர்ந்து, பல பக்கங்களிலும் வீசும். அஃது, அவ்வழியே போவார் வருவாரை அங்கு வந்து அச்சோலையில் நடக்கும் விந்தையைக் கண்டு செல்லும்படி கூறி அழைப்பதையொக்கும்.

அந்தச் சோலைக்கு மதுவனம் என்பது பெயர். அதைச் சார்ந்து சிறு காடு ஒன்றுண்டு. அக்காட்டில் புலி கரடி முதலிய வல்லியல் விலங்குகள் வசிக்கும். இறைச்சியைத் தின்று இன்பம் பெறும் அவ்விலங்குகள், இரவும் பகலும் அந்தக் காட்டில் திரிந்துகொண்டிருக்கும். அவை, மான், மரை, காட்டாடு முதலிய நல்லியல் வாய்ந்த மிருகங்கள் தம் கண்ணுக்குப் புலப்பட்டால்,

அவைகளின்மீது பாய்ந்து, அவற்றைக் கொன்று வீழ்த்தும். அவற்றின் குரூரச் செய்கைக்குப் பயந்து, அம்மிருகங்கள் செடிகள் அடர்ந்த புதர்களில் மறைந்து வசிக்கும்.

## 2. மன்னன் திருமணம்

'மாநிலங்கா வலனுவான்,
  மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
  தன்னால்தன் பரிசனத்தால்,
ஊனமிகு பகைத்திறத்தால்,
  கள்வரால், உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்(து)
  அறங்காப்பான் அல்லனோ ?'

—சேக்கிழார்

உலகத்திலுள்ள உயிர்கள் ஒரு மனப்பட்டிருத்தல் கடினத்திலும் கடினம். எறும்பு முதல் யானையீறாக உள்ள உயிர்கள் பலவும், தத்தம் மனம் போனவாறு நடக்க ஆரம்பிக்குமானால், இவ்வுலகம் என்னவாகும்? முறை பிறழ்ந்து கேடுறுமல்லவா ? ஆகையினால், கடவுள் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்யும்பொருட்டுச் சில வேற்றுமைகளை ஏற்படுத்தி யிருக்கின்றார் ; மானிடர்களுட் சிலர் வறியவராயும், சிலர் செல்வத்தில் சிறந்தவராயும் இருக்கின்றனர் ; சிலர் கை, கால் முதலிய உறுப்புக் குறைவுடையவராயும், சிலர் உறுப்புகள் பலவும் பெற்றுச் சிறந்து விளங்கும் தேகத்தை யுடையவராயும் இருக்கின்றனர் ; மற்றுஞ் சிலர் எளியவராயும், சிலர் வலியவராயும் இருக்கின்றனர். இவ்வித வேற்றுமை

களால், வலியவர்களுக்கு எளியவர்களும், செல்வர்களுக்கு வறியவர்களும் கீழ்ப்படிந்து நடத்தல் இயல்பாய் இருக்கிறது. உயர்வு தாழ்வு என்னும் இரு பெருங் கருவிகள் இவ்வுலகைச் சரியான நிலையில் இயங்கச் செய்கின்றன.

மக்கள், அறிவிலும் ஆற்றலிலுஞ் சிறந்த மனிதன் ஒருவனைத் தங்களுக்குத் தலைவனாகக்கொண்டு, அவன் கட்டளையிடுகிறபடி தாங்கள் நடந்து வருகின்றார்கள். மக்களிற் சிறந்தவன், கோற்றவன் என்னும் பெயர் கொண்டு, செங்கோல் செலுத்தி வருகின்றான். அவன் தன் குடிகளைப் பாதுகாப்பதிலேயே கண்ணுங் கருத்துமுடையவனாய் இருக்கின்றான். அவன் குடிகளுக்குத் தாய் போன்றவன். அன்னை எவ்வாறு தன் பிள்ளைகளைத் தீய நெறியில் செல்ல விடாமல், நல்ல வழியில் நாட்டமுடையவர்களாகச் செய்வதற்குப் பலவிதத்திலும் முயல்கின்றாளோ, அவ்வாறே அரசனும் தன் குடிகளைச் செம்மை உள்ளவர்களாகச் செய்ய முயல்கின்றான்.

இவ்வித அரச இலக்கணங்கள் எல்லாம் ஒருங்கமைந்த உத்தானபாதன் என்னும் பெயரினை உடைய மன்னன் ஒருவன், பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வட மதுரையில் ஆட்சிபுரிந்து வந்தான். அம்மன்னன் குடிகளுக்கு நேரும் துன்பங்களைத் தனக்கு நேர்ந்தனவாகக் கருதி, அவற்றைப் பரிந்து நீக்கும் பண்பினன்.

‘குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.’ —திருவள்ளுவர்

என்று பெரியார் கூறியவாறு அவனுடைய குடிகள் யாவரும் அவனைத் தெய்வமாகக் கருதி, வழிபட்டு வந்தார்கள். உத்தானபாதன், தன் வீரச் செய்கையால் பல

இராச்சியங்களைக் கைப்பற்றினன். ஆகையினால், அவனுக்குப் பல சிற்றரசர்கள் திறை செலுத்தி வந்தார்கள். அயல் நாட்டுப் போர்வீரர்களும் அரசர்களும் அவனது ஆற்றலைக் கேள்விப்பட்டு, அவன்மீது படையெடுக்க முயலாதிருந்தார்கள். அவனது ஆட்சிக் குட்பட்ட இராச்சியங்கள் சிறப்படைந்திருந்தன. அவன் தன்னுடைய கொலு மண்டபத்தில் சிறந்த அறிவாளிகளை அமர்த்தி, ஆதரித்து வந்தான். அவர்கள் அவனுக்கு அறிவை ஒத்திருந்தார்கள். அவர்கள் அவ் வரசனைத் துன்பந் தரத்தகுந்த வழிகளிற் செல்லவிடாமல், நல்வழியில் நாட்டமுடையவனாகச் செய்து வந்தார்கள்.

அரசன், தன்னுடைய வாழ்க்கையை இனிது நடத்தக் கருதி, இரண்டு அரசிளங்குமரிகளை மணம் புரிந்து கொண்டான். அந்தப் பெண்மணிகள் அழகிற் சிறந்தவர்கள். அவர்களுள் மூத்தவள் பெயர் சுநீதி என்பது; இளையவள் பெயர் சுருசி என்பது. அவ்விருவரும், தம் பெயர்களின் காரணக் குறியை வெளிப்படுத்தினர்.

சுநீதி, அற நெறியினின்றும் சிறிதும் மாறாதவள். அவள், 'குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்,' என்னும் முதுமொழிக்கு இலக்காகத் தன் கணவனைக் கடவுளாகப் பாவித்துப் பணிவிடை புரிந்து வந்தாள். சுருசிக்குத் தன்னை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக்கொண்டு, தன் கணவனை மகிழ்விக்கவேண்டும் என்பது கருத்து. ஆகையினால், அவள் நாளொரு விதமாகத் தன்னை அலங்கரித்துக்கொள்ளுவது வழக்கம். அவளது கண் கவர் வனப்பு அரசன் மனத்தை அடியோடு கொள்ளை கொண்டது.

## 3. மக்கட்பேறு

'பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர்?' —புகழேந்திப் புலவர்

மனிதர்கள் அடைய விரும்பும் செல்வங்களெல்லாம் மூன்று பகுதிகளுள் அடங்கும். அவை முறையே கல்விச் செல்வம், பொருட்செல்வம், புத்திரச் செல்வம் எனப் பெயர் பெறும். இம்மூன்றனுள் ஒருவன் ஏதேனும் ஒன்றைத்தான் அடையமுடிகிறது. பொருளுள்ளவனுக்குக் கல்வியும், கல்வியுள்ளவனுக்குப் பொருளும் அமைவது முயற்கொம்பாயிருக்கின்றது. இது பற்றியே பெரியாரும், 'நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே பூவின் கிழத்தி புலந்து,' என்று கூறினர். இனி, தன் பழவினைப் பயனால் ஒருவன் இவ்விரண்டையும் பெற்ற போதிலும் புத்திரச் செல்வம் அவனுக்குப் பொருந்துவதில்லை. இஃது உலக இயல்பு போலும்! இம்மூன்று செல்வங்களையும் ஒருங்கே பெற்றிருப்பார் இவ்வுலகில் மிகவும் சிலரேயாவர்.

புத்திரன், குலத்திற்குக் கொழுகொம்பு போன்றிருக்கின்றான். குலமென்னும் கொடி படரப் புத்திரன் இன்றியமையாதவன் ஆவன். 'சற்புத்திரரைப் பெற்றவர்களுக்கு எழு பிறப்பிலும் தீமை உண்டாதல் இல்லை,' என உண்மை நூல்கள் உரைக்கின்றன. ஒருவன் இவ்வுலகில் அடையும் செல்வங்களுள் புத்திரச்செல்வத்தைப்போன்றது வேறொன்றில்லை. மக்கள் கையிட்டளாவியது கூழே யாயினும், அஃது அமுதத்தை ஒக்கும். அவர்களது தழு தழுத்த குதலைச் சொற்கள், மறை மொழிகளே போலப்

பெற்ருர் மனத்திற்கு இன்பத்தை விளைவித்துத் துன்பத்தைத் தொலைக்கும். இதைக் குறித்தன்ருே சான்ருேரும்

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.' —திருவள்ளுவர்

எனக் கூறியிருக்கின்றனர்? தவிர, சற்புத்திரரைப் பெறுதலால், 'புத்' என்னும் நரகமும் ஒருவனைவிட்டு நீங்குகிறதென்றுங் கூறுவர். தாம் குழந்தைகளாய் இருக்கும் பொழுது தம்தாய் தந்தையருக்குத் தம் வார்த்தைகளால் பேரின்பத்தை விளைத்துப் பிறகு வாலிபப் பருவத்தில் வயது முதிர்ந்த அத்தாய்தந்தையரை இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் போன்று பாதுகாத்து வருபவர்களும் புத்திரர்களே.

உத்தானபாதன் மனைவியர் இருவரும் சில வருடங்களுள் ஒவ்வொரு பிள்ளைக்குத் தாயாராயினர். மூத்தவளுக்கு ஓராண் மகவும், இளையவளுக்கு ஓராண் மகவுமாக இரு குழந்தைகள் பிறந்தன. அரசன் மனைவியர் இருவருள் மூத்தவள் சில நாட்களுக்கு முன்பும், இளையவள் சில நாட்களுக்குப் பின்புமாகக் குழவிகளை ஈன்றனர். குழந்தைகள் பிறந்ததும் அரண்மனை முழுவதும் குதூகலம் பெருகியது. அந்த நற்செய்தியைச் சிலதிப் பெண்டிருட்சிலர், அரசனிடம் ஓடி அறிவித்தனர். அரசன் ஆனந்தக் கடலுள் அழுந்தினன். அவன், தன் மகிழ்சிக்கு அறிகுறியாகத் தன் அமைச்சர்களை அழைத்து, வறியவர்களுக்கு உண்டியும் உடையும் உதவும்படி கூறினன். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். ஏழைகள் ஆசைதீரத் தங்களுக்குவேண்டிய உணவையும் உடையையும் பெற்றதுமன்றி, மற்றும் தங்களுக்கு வேண்டிய அளவு பொருளும் பெற்று, அகமகிழ்ந்தார்கள். அவர்கள்

அனைவரும், 'அரச புத்திரர்கள் நீடூழி வாழ்க!' என வாழ்த்தினார்கள்.

அரண்மனையில் பிள்ளைகள் பிறந்த செய்தியை வள்ளுவர்கள் நகர மாந்தர் பலர்க்கும் மங்கல முரசறைந்து தெரிவித்தார்கள். அச்செய்தியைக் கேள்வியுற்ற குடிகள் அனைவரும், சந்தோஷமென்னும் சலதியிற் குளித்தனர். அந்நாள் அந்த நகரத்துக் குடிகளுள் ஒவ்வொருவர் வீட்டிலும் பிள்ளை பிறந்ததே போலக் காணப்பட்டது. குடிகள், பெருவிழாக் கொண்டாடுவதைப் போலத் தங்கள் வீடுகளின் முற்றங்களை வாழை, கமுகு முதலிய மரங்களை நாட்டிப் பசிய தோரணங்களும் மலர் மாலைகளும் தொங்கவிட்டு, அலங்கரித்தார்கள். ஒவ்வொரு வீட்டின் முற்றத்திலும் பல விளக்குகள் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

இவ்வாறு சில நாட்கள் கழிந்தன. பிறகு ஒரு நாள் சேடியர், அரச புத்திரர்களுக்கு மங்கல முழுக்காட்டினர். மன்னன் மறை மொழியாளர் சிலரைத் தனது அரண்மனைக்கு அழைத்துக் குழந்தைகளுக்குப்பெயரிட நல்ல முகூர்த்தம் ஒன்றைக் கணிக்குமாறு கட்டளையிட்டான். அவர்கள் அரசன் கட்டளைப்படி முகூர்த்தத்தைக் குறித்தார்கள். பிறகு, மங்கல வாத்தியங்கள் முழங்க, மூத்த அரசியின் புதல்வனுக்குத் துருவன் என்றும், இளைய அரசியின் புத்திரனுக்கு உத்தமன் என்றும் பெயர்களிடப்பட்டன. அன்றும் அரசன், ஏழைகளுக்குப் போதுமானவரையில் பொருள் வழங்கினான்.. அவர்கள், அவற்றை ஏற்றுக்கொண்டு, அரசனையும் அவன் புத்திரர்களையும் அன்போடு வாழ்த்திச் சென்றார்கள். தேவாலயங்களில் அருச்சனை முதலியன அதிக விமரிசையாய் நடந்தேறின.

வளர்பிறைச் சந்திரன் தினமொருகலையாய் வளர்ந்து தனது தண்ணியஒளியால் உலகத்தவரை மகிழ்விப்பதைப் போல, அரச குமாரர் இருவரும் வளர்ந்து அரசனையும் அரசிகளையும் மகிழ்வித்தனர். குழந்தைகள் தவழத் தொடங்கியதைக் கண்ட அரசிகள், அளவில்லாத ஆனந்தமடைந்தார்கள். சுநீதி, தன் மைந்தனுக்குப் பொற்கிண்ணத்திற்பாலூட்டிச் சீராட்டி, அவனை மிகுந்த அன்புடன் ஆதரித்து வந்தாள். துருவனுடைய சுருண்டு அடர்ந்த கேசமும், இளம்பிறையையொத்த நெற்றியும் சிறந்த பார்வையும், அப்பொழுதுதான் அரும்பும் முல்லை மொட்டுகளைப்போன்று விளங்கிய வெள்ளிய பற்களும் அவளுக்கு மிகுந்த இன்பத்தை அளித்தன. குழந்தை தன் மடியிலமர்ந்து குலவுந்தோறும் அவளுக்குக் குதூகலம் பெருகிற்று. 'பாச்சி, சோச்சி,' என்னும் அவனுடைய மழலைச் சொற்களைக் கேட்டு, அவள் மனமுவந்ததற்கு ஓரளவில்லை.

சுருசி, தன் புத்திரனுக்கு விதவிதமான ஆகாரங்களை அளித்து, அகமகிழ்ந்தாள்; அக்குழந்தைக்குப் பல விலையுயர்ந்த அணிகளை இட்டு, ஆனந்திததாள்; பொன் தொட்டிலில் செம்பட்டு மெத்தையிட்டு, அதில் தன் குழந்தையை வளர்த்தி, அருகிலிருந்து தாலாட்டுப்பாடி, அங்கங் குளிர்ந்தாள். சேடியர் பலர் அக்குழந்தைக்குக் குற்றேவல்களைச் செய்துவந்தனர். இவ்வாறு சிறுவர் இருவரும் வளர்ந்து வந்தனர். எட்டு வருடங்கள் கழிந்தன. அவ்விருவரும் பிள்ளைப் பருவமடைந்து, அரண்மனையை அடுத்த சிங்காரத் தோட்டங்களுக்குப் பணியாட்களுடன் சென்று விளையாடி வந்தனர்.

## 4. மைந்தன் மனத்துயர்

'ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்ருகும்;
அன்றி, அதுவரினும் வந்தெய்தும்;—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்;
எனையாளும் ஈசன் செயல்.' —ஔவையார்

நிலவும் இருளும் மாறி மாறி வருவதைப்போல, இன்பமும் துன்பமும் இடைவிடாமல் மாறிக்கொண்டேயிருக்கின்றன. சிலர் இரண்டு பெண்களை மணக்கின்றனர். அவ்வாறு செய்வதனுல் பெரும்பாலற்குத் துன்பம் விளைவதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். இவ்விடயம் உத்தானபாதனிடத்திலும் உண்டாயிற்று; அவன், தன் இளைய மனைவியான சுருசியின் ஆடம்பரங்களில் ஈடுபட்டுத் தன் மூத்த மனைவியாகிய சுநீதியினிடத்தில் தான் வைத்திருந்த அன்பைச் சிறிது சிறிதாகக் குறைத்தொழித்தான்.

மன்னனுக்குத் தன்னிடத்தில் உண்டான மன மாறுபாட்டைக் கண்ட சுநீதி மிகவும் வருந்திளுள். அவள், சில வேளைகளில் தனக்குள், "அந்தோ! ஆடவர்கள் பெண்களை விளையாட்டுப் பாவைகளாகக் கருதியிருக்கின் கின்ருர்கள்! நீதியின் வரம்பினின்று சிறிதும் மாருத என் ஆருயிர்த் தலைவருமா இவ்வாறு கருதவேண்டும்! என்னைப் போன்ற பெண்கள் என்ன செய்ய வல்லவர்கள்! எல்லாம் கடவுட் செயல்! ஆட்டுவான் ஒருவன் இல்லாவிட்டால், மரப்பாவை தானே ஆடுமோ? அவனன்றி ஓரணுவும் அசையாது. அவ்வாறிருக்கக் கடவுளுக்கு என்மீது ஏன் கருணையில்லை? சீ! 'பெண் புத்தி பேதைமைத்து,' என்பது உண்மைதான்போலிருக்கிறது! கடவு

ளுக்குக் கருணையில்லாமற்போகவில்லை. ஆயினும் நான் முற்பிறப்பில் என்ன வினைசெய்தேனோ, அதன் பயனை இப்பிறப்பில் அடைந்தேன்,'' என்று கூறித் தேறுதல் அடைவாள். அரசனுக்கு அவளிடத்தில் அன்பு இல்லாதிருந்த போதிலும், அவளுக்கு அரசன்மீதிருந்த அன்பு கொஞ்சமும் குறைபடவில்லை. கற்புடைய பெண்டிர்களது இலக்கணம் இதுவே.

உத்தானபாதன், ஒரு நாள் தன் கேளிக்கை மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். இவனைச் சூழ்ந்து அமர்ந்து,

'காவியங் கண்ணும் மூடா;
கவிர்இதழ் தானும் கோடா,
வாவியங் கமலம் அன்ன
வதனமும் நுதலும் ஏரு;
தூவியந் தோகை நல்லார்
சுவரின்மேல் எழுதி வைத்த
ஓவியம் பாடிற் றென்னப்
பாடினர் உருக யாரும்.'

—நல்லூர் வீரக் கவிராயர்

மற்றொரு புறத்தில் நடன மாதர் சிலர், பரதத்திற்குரிய இலக்கணங்களிற் சிறிதும் பிறழாமல், மன்னனுடைய கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும்படி நடித்தனர். மன்னன் பெருங்களிப்பு உற்றான். சிறிது நேரங் கழித்து இசையும் பரதமும் ஓய்ந்தன. பின்பு அரசன் அப்பெண்டிரின் திறத்திற்கு வியந்து, பரிசில்கள் பல அளித்தனன். அவர்களும் அரசனிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

அப்பொழுது சுருசி, அருமருந்தன்ன புத்திரனுடன் அங்கு வந்தாள். அவளைக்கண்ட வேந்தன் அன்பின் பெருக்கால் புன்னகைபூத்தான். அவளும் தன் காதலனை அன்புடன் நோக்கி, இளநகை அரும்பினள். உத்தமன் சுருசியின் பின்புறமாக அவள் சேலையைப் பற்றிக் கொண்டு நின்றான். மன்னன், அவனைத் தன் இரு கரங்களாலும் உயர எடுத்து, மார்புற அணைத்து, முத்தமிட்டுத் தன் தொடையின்மீதிருத்திக் குலவிக்கொண்டிருந்தான்.

அக்காலை, துருவன் தற்செயலாக அவ்விடத்திற்குச் சென்றான். சென்றவன், அங்குத் தன் தந்தை உத்தமனைத் தன் தொடைமீது அமர்த்திக் குலவிக்கொண்டிருப்பதையும், அவனருகில் தன் சிற்றன்னையாகிய சுருசி புன்முறுவல் பூத்து நிற்பதையும் கண்டான். அக்காட்சி, அவனுக்கு அளவில்லாத ஆனந்தத்தை விளைவித்தது. தம்மையொத்த சிறுவர்கள் செய்யும் தொழில்களைத் தாமும் செய்யவேண்டுமென்றுவிரும்புவது சிறுவர்பண்பு. உத்தமன் தன் தந்தையின் மடியில் உட்கார்ந்திருக்கக் கண்ட துருவன், தானும் அவ்வாறு புரியக் கருதினன். அவன் தன் கருத்தை நிறைவேற்றக்கருதித் தன் தந்தையினிடஞ் சென்று, அவன் தொடையின் மீது ஏற முயன்றான். அதை அங்கு நின்றுகொண்டிருந்த சுருசி கண்டு பொறாமை கொண்டாள். அவளுக்குக் கோபம் பொங்கியெழுந்தது. ஆகையால், அவள், துருவனைச் சரேலெனக் கையைப் பிடித்திழுத்து, அப்புறம் விட்டுவிட்டாள். துருவன் ஓவெனக் கதறினன்; தன் தந்தையின் திருமுகத்தையும் நோக்கினன். அவன் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர்ப் பெருக்கின் காட்சி, உத்தான பாதனுடைய மனத்தை வாள் போல அறுத்தது. எனினும், அரசன்

முகத்தில் துருவனுக்கு அனுகூலமான குறியொன்றும் புலப்படவில்லை. அதைக் காணத் துருவனுக்குப் பின்னுந் துன்பம் பெருகிற்று.

கன்னெஞ்சுடைய சுருசி, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய் நின்ற துருவனை நோக்கி, "சிறுவ, நீ அழுவதிற் சிறிதும் பயனில்லை.

"மென்கால் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போறற்போல்'
—புகழேந்திப் புலவர்

நீ போதல் சரியோ? சிங்கக் குட்டியிருந்து விளையாடுமிடத்தில் நரிக் குட்டிக்கு என்ன வேலை? முடவன் ஒருவன், நீண்டு வளர்ந்த மரத்தின் நுனிக்கிளையிற் கட்டப்பட்டுள்ள கொம்புத்தேனுக்கு இச்சித்தால், அது கிட்டுமோ? நீயோ, என் சக்களத்தியின் வயிற்றிற் பிறந்தவன். ஆகையினால், இவ்வரசுரிமை உனக்குக் கிடையாது. நீ சிறுவனாகையால், உனக்கு இன்னும் அறிவு தோன்றவில்லை. அரசர் மடியில் நீ அமர்ந்து விளையாட மனங்கொள்ளுவாயானால், நான் கூறுகிறபடி செய்: நீ இலக்குமி மணாளராகிய திருமாலை நோக்கித் தவங் கிடப்பாயானால், அவர் உன்முன் தோன்றி, 'உனக்கு வேண்டுவதென்ன?' என்று வினவுவார். அப்பொழுது நீ என் வயிற்றில் வந்து தோன்றுவதற்கு வரங் கேள். அவ்வரம் உனக்கு அட்டியின்றிக் கிட்டும். அதைப் பெற்று, என் வயிற்றில் வந்து பிறப்பாயானால், இவ்வரசுக்குரிய செல்வங்கள் உனக்குரியனவாகும். நடந்ததைப்பற்றி வருந்திப் பயனில்லை. பெற முடியாததைப் பெறுவதற்கு முயற்சி செய்யவேண்டும். அதுதான் சிறப்புடையது; போ," என்று சிறிதும் இரக்கமின்றிக் கூறினாள்.

சுருசியின் சினமொழிகளைக் கேட்ட துருவன், மன முளைந்து விம்மிவிம்மி அழுதுகொண்டே தன் தாயிடஞ் சென்றான்.

விளைவு அனைத்தையுங்கண்ட உத்தானபாதனுக்குத் தான் இன்னது செய்வதென்பது தோன்றவில்லை. அவன் என்ன செய்வான், பாவம்! குழந்தையைச் சாந்தப்படுத் தலாமென்று எண்ணினால், சுருசிக்குக் கோபம் வந்து விடும்; அவளைக் களிக்கச் செய்யவேண்டும் என்று கருதினால், குழந்தையின் துன்பத்தைத் தணிக்கமுடியாது. ஆகையினால், அவன் இருதலைக் கொள்ளி எறும்பு போல மனம் புழுங்கியிருந்தான். சுருசி, தன் புத்திரனை அழைத்துக்கொண்டு தன் இருப்பிடஞ் சென்றாள்.

## 5. நாரதர் தரிசனம்

'ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்
தாக்கருந் துன்பங்கள் தாம்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉம் உரவோரே நல்லொழுக்கம்
காக்கும் திருவத் தவர்.' —சமண முனிவர்

தமது நிலைமையை உயர்த்திக்கொள்ளக் கருதும் மாந்தருள் ஒவ்வொருவரும், அதற்குத் தகுந்த முயற்சிகளைச் செய்யவேண்டும். அவ்வாறு முயலும்போது பல இடையூறுகள் உண்டாகலாம். அவற்றிற்குப் பயந்து மனந்தளராமல், நிறை மனத்துடன் உழைப்பவரே வெற்றிபெறுவர். இழந்துவிட்ட ஒரு பொருளை மீண்டும் அடைவதற்கு முயற்சியே முதற் கருவியாகும். அந்தக் கருவியை உபயோகிக்காமல், மக்களுட்சிலர், தாம் இழந்துவிட்ட பொருளைப்பற்றிப் பலமுறை எண்ணி

யெண்ணி, இன்னலுறுகின்றனர். அஃது அறிவில்லாத செய்கையேயாகும்.

முயற்சியால் ஆகாதது ஒன்றுமில்லை. வறியவன் ஒருவன் சிறந்த செல்வனவதும் கல்வியறிவில்லாத ஒருவன் பிறகு பெரும்புலவனவதும் தத்தம் முயற்சியினலல்லவா? முயற்சியினலும், மனத்திட்பத்தினலும் அரசகுலத்திற் பிறந்த விசுவாமித்திரரும் அந்தண முனிவராய் மாறவில்லையா? இதுபற்றி அல்லவா அறிவிற் சிறந்த புலவரும்,

'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.' —திருவள்ளுவர்

என்று கூறியிருக்கிருர்?

தன் தந்தையின் மௌனத்தையும், சிற்றன்னையின் கொடுமையையுங் கண்ட துருவன், விம்மி விம்மி அழுது கொண்டே, தன் தாயிடஞ் சென்ருன். அவனுக்குண்டான பெருங்கோபத்தினல் அவனுடைய அழகிய கண்கள் கொவ்வைக் கனியைப்போலச் சிவந்தன; உதடுகள் படபடவென்று துடித்தன; கண்களிலிருந்து முத்துக் கோத்தாற்போல நீர் ததும்பி, அவன் மார்பின்மீது ஆறு போலப் பெருகியது.

சுநீதி, இவ்வித வேற்றுமைகளுடன் வந்த தன் மைந்தனைக் கண்டு, திடுக்கிட்டாள். ஆயினும், அவனுடைய துன்பத்திற்குக் காரணம் இன்னதென்பது அவளுக்குப் புலப்படவில்லை. அவளுடைய மனம் நெருப்பிலிட்ட இளந்தளிர்போல வாடியது. அவள் அவனைத் தேற்றக் கருதி, தாமரை மலர்போன்ற தன் இரு கரங்களாலும் அவனைத் தன் மார்பிடைத் தழுவினள்; பிறகு அவன்

கண்களிலிருந்து பெருகும் நீரைத் தனது முன்றானையால் துடைத்து, "என் கண்மணி, துருவ, நீ ஏன் இப்படி அழுகின்றாய்? உனக்கு என்ன நேர்ந்தது? நீ அழ வேண்டாம்; உற்றதை என்னிடத்தில் உரை," என்று அவனைப் பலவாறு வேண்டினாள்.

துருவன், நடந்ததைக் கூற முயன்றான். எனினும், அவ்வாறு செய்ய அவனால் இயலவில்லை. துன்பம் அவன் தொண்டையை அடைத்துக் குரலெழ வொட்டாமற் செய்தது. அவன் பின்னும் தேம்பித் தேம்பி அழுது கொண்டே நின்றான். அச்சமயத்தில் அங்கிருந்த சிலர், நடந்ததைச் சுநீதிக்குக் கூறினர். அவள் அதைக் கேட்டுப் பெருமூச்செறிந்தாள். அவளுடைய தேகம் இடி ஒலி கேட்ட நாகத்தின் உடலைப்போல நடுங்கியது. பின்பு அவள், ஒருவாறு மனந்தேறி, தன் மைந்தனை நோக்கி, "என்னருமைப் புதல்வ, நீ துன்பப்படாதே. கொடியவளாகிய என் வயிற்றிற் பிறந்ததனால், உனக்கு இந்தத் துன்பம் உண்டாயிற்று. நீ அழாதே. உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் படைத்துக் காக்கும் கடவுள் உன்னையுங் காப்பார். நீயோ, சிறுவன்! தவஞ் செய்வதற்கு உனக்கு எப்படித் தெரியும்? காட்டுக்குச் செல்வது உன்னால் ஆகத் தகுந்த காரியமன்று. ஆயினும், நீ உன் சிற்றன்னை கூறியபடி கடவுளை வழிபடுவாயானால், உனக்கு நீ கருதிய பதவி கைகூடும் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை. கடவுளை நம்பினவர்கள் கைவிடப் பட மாட்டார்கள். அவரை வழிபடுபவர்களுக்குக் கிட்டாத பொருள் இல்லை," என்று கூறி, அவனைத் தேற்றினாள்.

துருவன் மனந்தெளிந்து, தன் அன்னையைப்பார்த்து, "அன்னாய், நான் காட்டிற்கே சென்று தவஞ் செய்வேன். அப்படித் தவஞ் செய்யும்பொழுது கடவுள் என் முன் வருவாரானால், அவரிடம் வரம் பெற்றுத் திரும்புவேன்," என்று கூறித் தன் மனம் நாடிய வழியே சென்றான். சுநீதி, உடனே மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள்; பிறகு சிறிதுநேரங் கழித்து, எழுந்து நின்றாள். துருவன் அவள் கண்ணுக்கெட்டாத் தூரஞ் சென்றுவிட்டான். அவள் தன் மைந்தன் சென்ற திசையை நெடுநேரம் உற்று நோக்கி நின்றாள்; பலமுறை பெருமூச்செறிந்தாள். அவள் தன்னால் ஆவது இனி ஒன்றுமில்லை என்பதை உணர்ந்தாள். பிறகு அவள் தனக்குள், "அடியவர்களைக் காக்கும் அண்ணல்—இலக்குமி மணாளர்—என் மைந்தனைக் காவாமல் விட்டுவிட மாட்டார். திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை. ஆகையால், வனத்திற்குச் செல்லும் என் புதல்வனை அந்த வனத்தில் வசிக்கும் வனதேவதைகளே குறையொன்றும் நேராதபடி காக்கும். கொடு விலங்குகள் குடி கொள்ளும் காட்டில் குழந்தை எப்படித் தனியே இருந்து தவஞ் செய்வான்? அவ்விலங்குகள் அவனுக்குத் துன்பஞ் செய்யாமல் இருக்குமா? என்னதான் நடந்தபோதிலும், இனி என்னால் ஆகக்கூடியது என்ன? "அணைகடந்த வெள்ளம் அழுதாலும் வரப்போவது இல்லை," என்று கூறிக்கொண்டாள். அவள் மனம் சாந்தப்படவேயில்லை.

துருவன், நகரத்தைக் கடந்து, காட்டிற் புகுந்து சிறிதுதூரம் நடந்தான். அந்தக் காட்டில் மரங்கள் அடர்ந்திருந்தமையால், சூரியவெப்பம் உள் நுழையாமல் குளிர்ச்சியே குடிகொண்டிருந்தது. அதனால் துருவனுக்

குச் சிறிதும் களைப்புண்டாகவில்லை. கடவுளைக் காண வேண்டும் என்னும் எண்ணம் அவன் மனத்தில் வேரூன்றி யிருந்தது. ஆகையால், அதைத் தவிர வேறோர் எண்ண மும் அவன் மனத்திற் புகவில்லை. அந்தக் காட்டில் பல வகைப்பட்ட பறவைகள், மரக்கிளைகளில் அமர்ந்து, இனிது பாடிக்கொண்டிருந்தன. புலி முதலிய மிருகங் கள், அங்குமிங்கும் உலவிக்கொண்டிருந்தன. துருவன், அவைகளைக் கவனியாமலே குறுநடை நடந்துசென்றான். அந்த விலங்குகளும் அவனைக் கண்டு, அறிவிழந்து, பயந்து, பல பக்கங்களிலும் ஓடிவிட்டன.

ஒன்றையும் குறிக்காமல் சென்றுகொண்டிருந்த துருவன், அசைவற்று ஓரிடத்தில் நின்றான். 'நாராயண! நாராயண!' என்னும் ஓசை, வீணையின் இனிய ஒலியுடன் கலந்து, அவன் செவியில் தொனித்தது. அந்த ஓசை யைக் கேட்டதும் அவனுக்குத் தன்னையறியாமலே ஆனந் தம் உண்டாயிற்று; தேகம் மயிர்க்கூச்செறிந்தது. உடனே அவன் சுற்றுப் புறங்களில் திரும்பித் திரும்பிப் பார்த்தான். சிறிது தூரத்தில் யாரோ ஒருவர், தம் கையில் வீணையை ஏந்திப் பாடிக்கொண்டு வருவதை அவன் கண்டான். சிறிதுநேரத்திற்குள் அப்பெரியவரும் துருவனை அணுகினார். அப்பெரியவருடைய நீண்ட தாடி யும், தலையின் உச்சியிற்கட்டிய மயிர் முடியும், பவளத் தைப்போலச் சிவந்த திருமேனியும் காண்பார் மனத் தைக் காந்தத்தைப்போலக் கவரும் தன்மையுடையவை. அவர் நெற்றியில் தீட்டியிருந்த திருப்புண்டரம், தன்னைக் காண்பார் கருத்தைக் கடவுளிடத்தில் திருப்பவல்லது. அப்பெரியவர், ஒரு கரத்தில் வீணையும், மற்றொரு கரத் தில் செபமணி மாலையுந் தாங்கியிருந்தார். அவர் தாம்

திரிலோக சஞ்சாரராகிய நாரதர். மண்ணுலகத்தில் மனிதர்கள் படுந் துன்பங்களைக் களைந்து, இன்பத்தைக் கொடுத்து, அவர்களை மகிழ்விப்பதே அவருடைய முக்கியத் தொழில். செருக்குற்றுத் திரிபவர்களை அடக்குதலே அவர் தம் கடமையாகக் கொண்டவர். துருவன்—எட்டு வயதும் நிரம்பாத இளஞ்சிறுவன்—ஆதரவற்றவனாய்த் தனியே தவஞ்செய்யச் செல்லுவதை அவர் தம் ஞானத்தாலறிந்தார் போலும்! ஆகையினால், அவர் மனம் வருந்தி, துருவனுக்கு உதவிபுரிய வேண்டும் என்று கருதினார். உடனே அவர் தம் கரத்தில் வீணையை ஏந்திக் கல்லும் புல்லும் கனிந்துருகுமாறு எம் பெருமானைப் பாடிக்கொண்டே, துருவனிடம் வந்து சேர்ந்தார்.

அவர் தன்னருகில் வந்ததும், துருவன் அவருடைய தாமரை மலர்களைப்போன்ற திருவடிகளில் விழுந்து வணங்கி, எழுந்து, தன்னிரு கரங்களையும் சிரத்தின்மேற் குவித்து நின்றான். அவன் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. நாரதர், அவன் சிரத்தின்மீது தம் கரத்தை வைத்து, அவனை ஆசீர்வதித்தார். நடந்ததை முன்பே உணர்ந்தாராயினும், நாரதர், துருவனை மீண்டும் அவனது நகரத்திற்குத் திரும்பிச் செல்லச் செய்யக் கருதி, அவனைப் பல கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்; அவர் துருவனை நோக்கி, "அப்பா, குழந்தாய்! உனக்கு மங்களம் உண்டாகட்டும்! நீ யார்? சிறுவனாகிய நீ, துணையின்றி இந்தக் காட்டிற் செல்வதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார்.

துருவன், மிகுந்த வணக்கத்துடன், "சுவாமி, நான் வடமதுரைக்கு அரசராகிய உத்தானபாதரின் புத்திரன். என் பெயர் துருவன் என்பது. என் தந்தையாருக்கு

மனைவியர் இருவர். அவர்களுள் என்னுடைய அன்னை யாரே மூத்தவர். நான் இன்று காலையில் என் தந்தை யாரைக் காணக் கேளிக்கை மண்டபத்திற்குச் சென் றேன். அவர் அப்பொழுது என் சிற்றன்னையாரின் புத் திரனாகிய உத்தமன் என்பவனைத் தமது தொடையின் மேலமர்த்தி, விளையாடிக்கொண்டிருந்தார். அவர் பக்கத் தில் என் சிறிய தாயார் நின்றுகொண்டிருந்தார். என் தம்பியாகிய உத்தமன் தந்தையாரின் தொடையின் மீதிருந்து விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டதும் நானும் அப்படிச் செய்யக் கருதி, அவரிடம் ஓடினேன். அதைக்கண்ட என் சிற்றன்னையார், சிறிதும் மனம்பொறு மல் என்னைப் பிடித்து இழுத்து, அப்புறத்தே விட்டுவிட் டார். நான் வாய்விட்டு அலறினேன். அதற்கும் என் சிற்றன்னையார் மனமிரங்காமல், என்னுடைய அதிர்ஷ்ட ஈனத்தைக் குறித்துப் பலவிதமாக நிந்தித்தார். நான் தந்தையாரின் மடிமீதிருந்து விளையாடக் கருதினால், கமலை நாயகரைக் குறித்துத் தவங்கிடந்து வரம்பெற்று, அவர் வயிற்றில் வந்து பிறக்கவேண்டுமாம். ஆகையினால், என் மனம் எம்பெருமானையே நாடுகிறது. நான் அந்தப் பரம்பொருளைக் கண்டு, யாரும் பெறுவதற்கரியதும் அழியாததுமான ஒரு பதவியைப் பெற விரும்புகின் றேன். அதற்கு உங்கள் தரிசனமே நற்குறியாயிற்று. இனி, அடியேன் கடைத்தேறும் வழியை எனக்குத் தெரி வித்து அருள்புரிய வேண்டும்,'' என்று மிகுந்த பணி வுடன் கூறினான்.

நாரதர், துருவனைப் பார்த்து, "குழந்தாய், நீ சிறு வன்; ஆட்டத்தில் நாட்டமுள்ளவன். இளம்பருவத்தில் இன்பமுந் துன்பமும் ஒன்றே. அப்படியிருக்கச் சிற்

றன்னை கூறியதற்காகச் சீற்றங்கொண்டு, நீ இப்படி தனியே வெளிவருதல் தகுமோ? அப்படித்தான் வெளி வந்தாய்; கருதிய காரியத்தை முடிக்க உன்னால் ஆகுமோ? வேதங்களும் அக்கடவுளைத் தேடிக் காணவில்லை யென்றால், சிறுவனாகிய நீ அவரைக் காண்பது எவ்வாறு? தவஞ்செய்து அவரைக் காண்பது எளிதான காரிய மன்று. இது காடு. இதில் வசிக்கும் விலங்குகளின் கொடுமையைப்பற்றி உனக்குச் சிறிதும் தெரியாது. புலியின் உறுமலும், சிங்கத்தின் கர்ச்சிப்பும் உனக்குப் பெருந் துன்பத்தை விளைக்கும். நீ கொண்டிருப்பது வீண் எண்ணம். நீ திரும்பி வா. நாம் நகரத்திற்குச் செல்லலாம். உன் தாய் உன்னைப் பிரிந்து உயிர் தரியாள். இது தெரியாதா உனக்கு? நான் சொல்லுகிறபடி கேள்: நான் உன் தந்தையினிடம் விஷயத்தைக் கூறி, இனி உன்னை மிகுந்த அன்புடன் பாதுகாக்கச் சொல்லுகிறேன்," என்று கூறி, அவனைப் பலவிதங்களில் போதித்துப் பார்த்தார்.

அவருடைய வார்த்தைகளைக் கேட்ட துருவன் அவரை நோக்கி, "முக்குறும்பெறிந்த முதல்வரே! நீர் சொல்லுவது அவ்வளவும் சிறப்புடையதே. ஆனாலும், அது மனத்திற்கு இன்பத்தைத் தரத்தகுந்ததாக இல்லையே! நான் என்ன செய்வேன்? இதற்காக நீங்கள் என்னை மன்னிக்கவேண்டும். உயர்ந்த பதவியைப் பெற வேண்டுமென்னும் அவா ஒன்றே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதைப் பெறுவதற்கு அடியேன் செய்ய வேண்டுவதைத் தெரிவித்தருள வேண்டும்," என்று சொல்லித் தலைவணங்கி நின்றான்.

நாரதருக்கு அவனுடைய வீர ரசம் பொருந்திய வார்த்தைகளைக் கேட்டதனால், மனம் களிப்படைந்தது

சிறுவன் எவ்விதமான வார்த்தைக்கும் இணங்கான் என்பதை அவர் நன்கு உணர்ந்தார். அவர், துருவனைத் தம்முடைய இரு மலர்க் கரங்களாலுந் தழுவி, "சிறுவ, நீ உன் சிற்றன்னை கூறியவாறே தவமுடித்துத் திரும்புவாய். இவ்விடத்திற்குச் சற்றுத் தூரத்தில் மதுவனம் என்னும் பொழில் ஒன்றிருக்கிறது. அதற்குச் சமீபத்தில் தெளிந்த நீரையுடைய யமுனை என்னும் நதி ஒன்று பாய்கிறது. நீ அங்குச் சென்று, ஆற்றில் நீராடிப் பிறகு அந்தச் சோலையில் அமர்ந்து, திருமாலைக் குறித்துத்தவம் செய். காய் கனி முதலியவைகளைத் தின்று, தேகத்தைச் சிறிது சிறிதாக ஒடுக்கவேண்டுவது தவத்திற்குரிய முறையாகும்," என்று இயம்பி, 'ஓம் பகவதே வாசுதேவாய நம:' என்னுந் திவ்விய மந்திரத்தையும் அவன் செவியில் ஓதினார்.

துவாதசாக்கர மந்திரத்தைச் செவியிலேற்ற துருவனுக்குத் தலையிலிருந்த சுமையைத் தரையிலிறக்கியதே போலத் தோன்றிற்று. புதுவிதமான உவகையும் வலிமையும் அவனுக்குண்டாயின. அவன், நடுக்கடலில் திசை தப்பியோடும் மாலுமிக்கு ஒரு துறை தோன்றினாற்போல, மனத்தெளிவு அடைந்தான். உடனே நாரதர் தம் வழக்கப்படி வீணகானஞ் செய்துகொண்டே சென்றனர். அவரைத் துருவன் தன் கண்ணுக்குத் தெரியும் வரையில் இமைகொட்டாமல் பார்த்து நின்றான். பிறகு அவன், தாமரை மலரைப் போன்ற தன் இரண்டு பாதங்களுஞ் சிவக்கக் குறுநடை நடந்து, மதுவனத்தை அடைந்தான்.

## 6. மன்னனும் மாதவரும்

'மேவி நிலத்தி லிருக்கும்; நிற்கும்; வீழும்;
ஓவிய மொப்ப உயிர்ப்ப டங்கி ஓயும்
பாவியை உற்றெதிர் பற்றி எற்ற எண்ணும்;
ஆவி பதைப்ப அலக்கண் எய்து கின்ருள்.'

—கம்ப நாடார்

கொடிது, கொடிது, புத்திரப் பிரிவு கொடிது? மக்களைப் பிரிந்து யார் தாம் மனமுவந்து இருப்பர்? ஐயறிவுடைய மிருகங்களும், தங்களுடைய குட்டிகளை இழக்க நேரிட்டால், மிகவும் துன்பமடைகின்றன. கொலைத் தொழிலையுடைய புலி சிங்கம் முதலிய விலங்குகளும் தம்முடைய குட்டிகளின்மீது அளவில்லாத அன்பு வைத்திருக்கின்றன. அவை சிற்சில சமயங்களில் தங்கள் குட்டிகள் காணுமற்போனல், உயிரையுங்கூட விட்டுவிடுகின்றன. இல்லுறை மிருகங்களாகிய நாய் பூனை முதலியவைகளும் தம் குட்டிகள் காணுமற் போய்விட்டால், இங்குமங்கும் அலைந்து மனம் வாடுவதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். சிட்டு, நாகணவாய்ப்புள், காகம் முதலிய பறவைகளும், தம் கூட்டில் தாம் பொரித்து வைத்த குஞ்சுகள் காணுமற் போய்விட்டால், மனமுளைந்து நாளெல்லாம் உடல் சோரக் கத்துகின்றன. என்னே கடவுளின் கருணை! எறும்பு முதல் யானையீருகவுள்ள உயிர்கள் எல்லாவற்றையும் கடவுள் அன்பெனுங் கயிற்றைக் கொண்டு பிணித்திருத்தல் என்ன விந்தை! இவ்வுலகத்தையே துரும்பாக மதித்து, அகப்பற்றுப் புறப்பற்றுகளை ஒழித்து காட்டிற்சென்று காய்கனியுண்டு காலங் கழிக்கும் பெருந்தவசிகளையும் அன்பென்னும் இவ்வலை

தன்னுள் அகப்படுத்துகிறது. இதுபற்றியே சிறந்த அறிவாளர்களும், 'கடந்த மக்களும் கடப்பரோ மக்கள் மேற் காதல்?' என்று கூறியிருக்கின்றார்கள். ஆசை அனைத்தும் விட்ட தவசிகளே இவ்வாறிருக்கின்றனரென்றால், இவ்வுலகத்தின் மண், பெண், பொன் என்னும் மாயவலையில் சிக்குண்டு கிடக்கும் மாந்தருடைய செய்கை என்னவாகும்?

உத்தானபாதன், முதலில் விஷயம் இவ்வளவு பெருகும் என்பதை உணர்ந்திலன். 'விளையாட்டே வினையானது.' என்பது போல, இறுதியில் எல்லாம் துன்பமாய் முடிந்தது. ஆகையினால், அவன் தன் அறியாமையையும் சுருசியின் கொடுமையையும் எண்ணி மிகவும் வருந்தினன். அவனுடைய மனம் 'கடன்பட்டாருடைய நெஞ்சம் போலக் கலங்கியது. அவன் துருவன் தன்னைவிட்டகன்றதும், தனது அரண்மனைக்குச் சென்று, அமளியின்மீது, 'அம்மவோ!' என்று வீழ்ந்தனன். அரண்மனை முழுவதும் அழகு குலைந்து காணப்பட்டது. அந்தப்புரத்தில் ஆடல் பாடல் பலவும் அடங்கிவிட்டன; துக்கமென்னுந் தேவதை அரண்மனையில் குடிகொண்டிருந்தாள். அங்கு மனம் மகிழ்ந்திருந்தவள் சுருசி ஒருத்தியே.

சூரியன், இந்த துன்பத்தைக் கண்டு சகியாதவன் போல, மேற்குத் திசையில் மறைய ஆரம்பித்தான். மன்னன் சற்றுத் துயரம் நீங்கித் தனியே ஓரிடத்தில் வீற்றிருந்தான். துருவனுக்குத் துவாதசாக்கர மந்திரத்தை உபதேசித்த நாரதர், அரசனுடைய அரண்மனையை அடைந்தார். அவருடைய வருகையைக்கண்ட உத்தானபாதன், உடனே இருக்கை விட்டெழுந்து, அவரைத் தன் முடி தாழ்த்தி வணங்கினன். பிறகு, அவருக்குச்

சிறந்த ஆதனமொன்றை அமைத்து, அதில் அவரை இருத்தி,

'நிலஞ்செய்தவம் என்றுணரின்
அன்றுநெடி யோய்! என்
நலஞ்செய்வினை உண்டெனினும்
அன்று; நகர் நீயான்
வலஞ்செய்து வணங்களளி
வந்தஇது முந்தேன்
குலஞ்செய்தவம்,' என்றினிது
கூற,முனி கூறும்:' —கம்ப நாடர்

"மன்னர் மன்ன, உனக்கு ஏற்பட்ட குறை என்ன? அரண்மனை அழகு குலைந்து காணப்படுகின்றதே! காரணம் என்ன? உன் புத்திரர் இருவரும் சுகமோ? செல்வத்திற்சிறந்த உனக்குமா துன்பம் உண்டாகவேண்டும்? 'மகபதிக்கும் மன வாட்டம் உண்டு,' என்னும் உலக வழக்கிற்கு நீயும் இலக்காயினையோ! உற்ற குறையை ஒளியாமற் கூறு."

நாரதர் ஒன்றும் அறியாதவரைப்போல வினவிய வினக்களுக்கு அரசன் விடையளிக்க முயன்றான். எனினும், அவனால் அப்படிச் செய்ய இயலவில்லை. துன்பத்தினால் அவனுக்குப் பேச நாவெழவில்லை. நாரதர் அவனைத் தேற்றினர். பிறகு மன்னன் மனந் தெளிந்து, "சுவாமி, எனக்கு இரண்டு புத்திரர்கள் உண்டென்பது உமக்குத் தெரிந்ததே. இருவருள் மூத்தவன் துருவன் என்பவன். பாவியேனுடைய கொடுமையால், அவன் என்னைவிட்டுப் பிரிந்து காட்டிற்குப் போய்விட்டான்," என்று வருந்திக் கூறினன்.

நாரதர், "அவன் ஏன் காட்டிற்குப் போக வேண்டும்?" என்றார்.

உத்தானபாதன், "என்னுடைய அறியாமையே அதற்குக் காரணம்," என்று கூறிக் கண்ணீர் விட்டான்.

நாரதர், "அரசர்க்கு அரச, இஃதென்ன விபரீதம்! உனக்குப் பைத்தியமோ! கூறுவதை விளங்கக் கூறினால் அல்லவோ தெரியும்?" உன் மூத்த குமாரன் சிறியவனாய் இருக்கவேண்டுமே! அவனுக்கு இப்பொழுது எத்தனை வயது ஆயிற்று?" என்றார்.

உத்தானபாதன், "அவனுக்கு இப்பொழுது நடப்பது எட்டாம் வயது," என்றான்.

நாரதர், "விந்தையிலும் விந்தை! இவ்வளவு இளம் பருவத்தில் ஒரு குழந்தை காட்டுக்குச் செல்ல காரணமென்ன?" என்றனர்.

உத்தானபாதன், "சுவாமி, நீவிர் மூன்றுலகங்களிலும் அன்றன்று நடக்கும் விந்தைகளை நேரிற்சென்று கண்டறிய வல்லவராகையாலல்லவா, உமக்குத் திரிலோக சஞ்சாரி என்னும் பெயர் வழங்குகிறது? அப்படியிருந்தும் நீர் ஒன்றும் அறியாதவர்போல நடிப்பது எதைக் குறித்தோ, நான் அறியேன்!" என்று கூறிப் பின்னும் கண்ணீர் பெருக்கினன்.

அரசன் கண்ணீர் விடுவதைக் கண்ட நாரதர் பின்னும் அவனை வருத்துவது சரியன்று என்பதை உணர்ந்து "மகிப, நான் உன் விஷயத்தை உணர்ந்தேன். நீ துன்பப்பட வேண்டா. எல்லா உயிர்களுக்கும் பொதுவாய் இருந்து நீதி செலுத்த வேண்டுவது பார்த்திபன் கடமை.

'கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்;
கோள்நிலை திரிந்திடின் மாரிவறங் கூரும்;
மாரிவறங்கூரின் மன்னுயிர் இல்லை;
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின் றாகும்.'
—கூல வாணிகன் சாத்தனார்

ஆகையினால், அரசன் ஒருநாளும் முறை பிறழ்ந்து நடத்தல் அடாது. அவ்வாறிருக்க, நீயோ, உன் மனைவியர்களிடத்திலேயே மாறுபாடுடையவனாய் நடந்துகொண்டாய். இனி நீ அவ்வாறு செய்வது தகாது. நான் உன் புத்திரசிகாமணியாகிய துருவனை—அறியாப் பாலகனை—அடவியிற் கண்டேன்; அவனிடமிருந்து நடந்ததை உணர்ந்தேன். தூயவன் என்று அவனையே கூறலாம். அவனுடைய வீரமும், தெய்வ பக்தியும், பணிவும் இவ்வளவு இளம்பருவத்தில் யாரிடத்தில் காணக் கிடைக்கும்! அவன் அழியாத ஊக்கமுடையவன் என்பதை அவனுடைய வார்த்தைகளால் நான் அறிந்தேன். அவனைத் திருமால் தடையின்றிக் காப்பார். அவன் சீக்கிரத்தில் தன் கருத்தை முடித்துத் திரும்புவான். அதைப்பற்றி கவலையே வேண்டா. உனக்கு எல்லா நன்மையும் உண்டாகட்டும்! நான் சென்று வருகிறேன். நீ உன் மனைவியாகிய சுநீதிக்கும் இதை அறிவித்து, அவள் துன்பத்தை ஒழி. குழந்தையைப் பற்றி நீ இனித் துன்பப்பட வேண்டுவதில்லை,'' என்று சொல்லித் தம் இருக்கையை விட்டு எழுந்தார்.

அரசன், அவரை முடி தாழ்த்தி வணங்கி, வழி விட்டான். நாரதர், பரமனைப் பாடிக்கொண்டே சென்றனர். உத்தானபாதன், நாரதருடைய நல்லுரையால்

சிறிது கலக்கம் ஒழிந்திருந்தான். ஆனபோதிலும், தன் புதல்வனைப் பற்றிய எண்ணம் எப்போதும் அவன் மனத்தில் ஊசலாடிக்கொண்டே இருந்தது.

## 7. கடவுள் தோன்றுதல்

'காக மோடுகழு கலகை நாய்நரிகள்
சுற்று சோறிடு துருத்தியை,
காலி ரண்டுநவ வாசல் பெற்றுவளர்
காம வேள்நடன சாலையை,
மோக ஆசைமுறி யிட்ட பெட்டியை,மும்
மலமி குந்தொழுகு கேணியை,
மொய்த்து வெங்கிருமி தத்து கும்பியை,
முடங்க லார்கிடை சரக்கினை,
மாக விந்த்ரதனு மின்னை யொத்திலக
வேத மோதிய குலாலனுர்
வனைய மெய்யதடி கார னையமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொய்யை மெய்யெ னக்கருதி
ஐய! வையமிசை வாடவோ!
தெரிவ தற்கரிய பிரம மே!அமல
சிற்சு கோதய விலாசமே!' —தாயுமானவர்

நமது தேகமானது ஒரு மண் பாண்டத்தை ஒத்து விளங்குகின்றது. ஆகையினால், அஃது எப்போதாகிலும் ஒரு போது அழிந்துவிடக் கூடியது. எனினும், அப்படிப்பட்ட உடலை நம்பி, மக்கள் இவ்வுலகில் உள்ளவரையில் தங்கள் மனம் போனவாறு நடக்க ஆரம்பிக்கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது வெறுக்கத் தகுந்த காரியமேயாகும். உயிர்கள் எடுக்கும் பிறவிகள் எல்லா

வற்றினும் மானிடப் பிறவியே சிறந்தது. அதைப்பெற்ற மாந்தர், உடனே தாம் தேடிக்கொள்ள வேண்டிய வழியை மிகவும் தீவிரமாகத் தேடிக்கொள்ள வேண்டும். விதை விதைக்கும் நாட்களில் வீட்டில் உறங்கிவிட்டு, அறுப்பு அறுக்கும் நாட்களில் அரிவாள் கொண்டு போகிறவனுக்கு ஒன்றும் கிடைக்காதல்லவா? அது போல, நாம் நம்முடைய வாழ்நாட்களை வீணிற் கழித்து விட்டுக் கடைசியில் வருந்துவதனாற் பயனில்லை. மானிட தேகத்தின் உதவியைக்கொண்டு, நாம் நல்வழியில் முயல்வோமானால், பிறப்பு இறப்பு என்னும் இரு பெருங் கடல்களினின்றுங் கரையேறலாம். பிறப்பு இறப்பு என்னும் இரு பெருங் கடல்களைக் கடப்பதற்குத் தேகமே தகுந்த புணையாகும். மக்களுடைய முயற்சியே அந்தப் புணையை வேகமாக மோதும் அலைகளை எதிர்த்துச் செலுத்துவதற்குரிய துடுப்பாகும். தேகமாகிய புணையை முயற்சியாகிய துடுப்பினால் இடையூறுகளாகிய அலைகளை எதிர்த்துச் செலுத்தும்போது, நாம் முக்கியமாகக் கவனிக்கத் தக்கது ஒன்றுண்டு: அஃதாவது, கப்பலோட்டிக்குத் துறைமுகத்தின்மீது நாட்டமிருப்பதைப் போல, நம்முடைய அறிவை நாம் பிறவிக் கடலுக்குத் துறைமுகமாகிய கடவுளிடத்தில் நிலைபெறச் செய்ய வேண்டுவதே. அப்படிச் செய்வோமானால், அடைய வேண்டிய நற்பதவியை நாம் தடையில்லாமல் அடையலாம்.

துருவன், வளம் மிகுந்த மதுவனத்தை அடைந்தான். அதைப் பார்த்ததும் அவனுக்கு இணையில்லாத இன்பம் உண்டாயிற்று. அவன் தனக்கு நாரதர் கூறிய பொழில் அஃதே என்பதை உணர்ந்தான். உடனே

அவன், அந்தப் பொழிலுக்கு அருகில் பாயும் யமுனை யாற்றில் இறங்கி நீராடினன்; பிறகு, துன்பத்தைத் தொலைத்துக் கரையேறுபவனைப்போலக் கரையின்மீது வந்து, தவம் இயற்றுவதற்குத் தகுந்த இடம் எது வென்று சுற்றிலும் பார்த்தான்; அங்கு ஒருபுறத்தில் சில மலர் மரங்கள் தழைத்திருக்கக்கண்டு, அங்குச் சென்று உட்கார்ந்து, மகா விஷ்ணுவைத் தன் மனத்தால் சிந்திக்கத் தொடங்கினன்.

தவசிகள் தங்களுடைய ஐம்பொறிகளையும் புலன்கள் மேற்செல்லவிடாமல், தம்மால் கூடும் அளவு அடக்கிக்கொள்ள வேண்டும். அதற்காக அவர்கள் சில நாட்கள் வரையில் காய், கனி, கிழங்கு, சருகு முதலியவைகளையே ஆகாரமாகக் கொள்ளுவார்கள். இப்படிப் பழகுவதனால், ஐம்பொறிகளினுடைய வல்லமை குறையும். அவ்விதம் குறைவுபடுவதால், அவைகள் தங்களுடைய எண்ணப்படி காரியங்களைச் செய்யாமல், அறிவின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடக்கும். ஆகையினால், துருவனும் அப்படிச் செய்யக் கருதினன். அவன் முதலில் ஒரு மாதம் வரையில் இரண்டு நாட்களுக்கு ஒரு முறை விளா, இலந்தை, கொய்யா முதலிய கனிவகைகளைப் புசித்தான்; ஒரு மாதம் வரையில் ஆறு நாட்களுக்கு ஒருதரம் உலர்ந்த இலைகளை உட்கொண்டான்; ஒரு மாத காலம் யமுனையாற்றின் துறை நீரையே அருந்தினன்; நான்காம் மாதம் காற்றையே உட்கொண்டான்.

இவ்வாறு நான்கு மாதங்கள் கழிந்தன; ஐந்தாம் மாதமும் அணுகிற்று. பிறகு, அவன் ஒன்றையும் உட்கொள்ளாமல் தன் மூச்சை அடக்கித் திருமாலைக் கருத்தில் இருத்தி, பாதத்தின் பெருவிரலைத் தரையில் ஊன்றி

நின்றான். உலகம் முழுதும் உண்டவராகிய மாயவர், அவனுடைய உள்ளத்தில் தங்கினர். அதனால், அவனைத் தாங்கமுடியாமல் பூமிநிலை குலைந்தது. அஃது அலைகடலின் நடுவில் புயல்காற்றில் அகப்பட்ட மரக் கலத்தைப் போல அசையத் தொடங்கியது.

துருவனுடைய தவத்தினால் உண்டான தவக் கனலின் வெப்பம் உலகத்தைப்பற்றி வருத்தத் தொடங்கியது. விண்ணுலகத்திலுள்ள தேவரெல்லாரும் மூச்சு விட முடியாமல் தவித்தனர். அவர்களுக்குக் காரணம் இன்னதென்பது புலப்படவில்லை. ஆகையினால், அவர்கள் ஒன்றுகூடி, திருமாலுக்கு இருப்பிடமாகிய வைகுந்தத்திற்குச் சென்றார்கள். அங்குத் திருமால் சங்கு, சக்கரம், கதை, கோதண்டம், கடகம் ஆகிய ஐம்படைகளும் புடை தயங்க வீற்றிருந்தார். தேவர்கள், அவரைக் கண்டு, வணங்கி நின்று, தமக்குண்டான துன்பத்தை அவருக்குத் தெரிவித்தார்கள். பிறகு, எம்பெருமான் அவர்களை நோக்கி, "தேவர்காள், நீங்கள் கொண்ட மனக்கவலையை ஒழியுங்கள். மண்ணுலகத்தில் எம் அடியவர்களுள் ஒருவனான துருவன் என்பவன் எம்மைக் குறித்துத் தவஞ் செய்கின்றான். அவன் மூச்சடக்கி நின்றதனால், உங்களுக்கு இவ்வாறு கலக்கம் உண்டாயிற்று. நாம் இப்பொழுதே சென்று, அவன் கருதியதை அவனுக்கு அளித்து, உங்களைக் காப்போம். நீங்கள் செல்லுங்கள்," என்று கூறினார். தேவர்கள், மிகுந்த களிப்புடன் தத்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

பின்பு, கருணையங்கடவுளாகிய மகாவிஷ்ணு, வைகுந்தத்தின் வாயிலுக்கு வந்தார். அவரைக் கருதிய இடத்திற்குத் தாங்கிச் செல்பவன் கருடன். அவன், பொன்

னிறச் சிறகையும், பருத்த உடலையும், கூரிய நகங்களையும், வளைந்த அலகையும், ஒளிமிகுந்த கண்களையும் உடைய பறவையரசன்; வல்லமையில் மிகுந்தவன். அவன் பெருமானைக் கண்டவுடனே விரைந்து வந்து, அவர் அருகில் நின்றான். அவர், அவன்மீது ஏறியுட்கார்ந்தார். உடனே அவன், பூமியை நோக்கிக் காற்றும் வேகத்தில் பின்னிடப் பறந்து சென்றான்.

துருவன், தன்னுடைய விழிகளை மூடிக்கொண்டு, தவம்செய்த வண்ணம் இருந்தான். கருடன், சிறிது நேரத்திற்குள் மதுவனத்தை அடைந்தான். திருமால், கருடன் முதுகிலிருந்து இறங்கித் துருவன்முன் நின்றார். துருவன், துவாதசாக்கர மந்திரத்தை ஓதியவண்ணம் இருந்ததால், வெளியில் நடக்கும் காரியம் ஒன்றையும் அவன் உணரவில்லை. ஆகையினால், எம்பெருமான், அவன் மனத்திற்கொண்டிருந்த தம்முடைய உருவத்தை அவ்விடத்திலிருந்து அகலச் செய்தார். உடனே துருவன் திடுக்கிட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தான். அப்படிப் பார்த்ததும், அவன்,

'மண்டலம் நிறைந்த திங்கள்
வதனமும், கமலக் கண்ணும்,
குண்டலம் சுடரும் காதும்,
குறுநகைப் பவள வாயும்,
தண்டுழாய் அலங்கல் மார்பும்
தடக்கையோர் நான்கு மாகக்
கண்டனன் மறையுங் காணக்
கரியவன் உருவம் அம்மா!'

—செவ்வைச் சூடுவார்

அவரது திருவுருவத்தைக் கண்டதும், துருவன் அவ்வுருவம் முழுவதையும் உட்கொள்ளுபவன் போல உற்றுப் பார்த்துக்கொண்டே சிறிதுநேரம் நின்றான்; பிறகு அந்தத் திருமேனியைத் தன்னுடைய இரண்டு கரங்களாலும் தழுவுபவனைப்போல அவரருகில் ஓடினான். அவனுடைய மனம் அனலைக் கண்ட நெய்யைப்போல உருகியது; கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் முத்தைப்போலத் துளித்தது. களிப்பினால் அவன் கூத்தாடினான்; அவரைத் துதிக்க வகை அறியாமல் தயங்கினான். அப்பொழுது கருணையங்கடவுள், தம்முடைய செந்தாமரையொத்த கரத்தில் தாங்கியிருந்த வெண் சங்கினால் துருவனுடைய அழகிய கபோலத்தைத் தடவியருளினார். அடியார்களைக் காக்கும் அந்தப் பாஞ்சசன்னியம் என்னுந் திருச்சங்கின் பெருமை யாரால் கூறமுடியும்? அதனுடைய பரிசம் பட்ட மாத்திரத்தில் துருவனுக்கு உண்மை ஞானம் பெருகி வழிந்தது. உடனே அவன், தன் மெய்ம்மறந்து, எம்பெருமானைப் புகழ்ந்து பாடத் தொடங்கினான்:

'பச்சைமா மலைபோல் மேனிப்
பவளவாய்க் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே!
ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர, யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்;
அரங்கமா நகரு ளானே!

'மனத்திலோர் தூய்மை இல்லை;
வாயிலோர் இன்சொல் இல்லை;

சினத்தினுல் செற்றம் நோக்கித்
தீவிளி விளிவன் வாளா ;
புனத்துழாய் மாலை யானே!
பொன்னிசூழ் திருவ ரங்கா!
எனக்கினிக் கதியென்? சொல்லாய்
என்னையா ளுடைய கோவே!

—தொண்டரடிப்பொடியாழ்வார்

இவ்வாறு மனம் கரைந்து தம்மைப் புகழும் உத்தமனுகிய துருவனைக் கண்ட நீலமேகவண்ணர், இளஞ்சிரிப்புடன், "மணிமுடி தரித்த மன்னவன் புத்திர, யாம் உன் அருமையான தவத்தை மெச்சினேம்! நீ பதங்கள் எல்லாவற்றிலும் மேலான பதத்தை அடையக் கருதினய். அஃது எமக்குத் தெளிவாயிற்று. உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் அன்னமயத்தினுல் உயிர் பிழைத்திருக்கின்றன. அன்னத்திற்கு முதற் காரணம் மழை. அம்மழைக்குக் காரண கருத்தாவாயுள்ளது சூரியன். அஃது ஆகாயத்தில் ஒளி செய்துகொண்டிருக்கிறது. அதைச் சுற்றிலும் பல நட்சத்திரங்களும் கிரகங்களும் உலவிக் கொண்டிருக்கின்றன. அவைகளுள் மிகச் சிறந்த நட்சத்திரம்* ஒன்றுண்டு. அது பொன் மயமாகிய மேருமலையின் உச்சியிலிருந்து ஒளி வீசுகின்றது. அஃது ஒருநாளும் அழியாததாகும். அந்தப் பதவி தேவர்களுக்கும் கிடைத்தற்கு அரியதாகும். அப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த பதவியை நாம் உனக்குத் தருகிறேம். நீ நீடூழி வாழக்கடவாய்! ஆனபோதிலும், நீ இளஞ்சிறுவன்; உலக இன்பங்களைச் சிறிதும் அறியாதவன். ஆகையினுல்,

* வான தத்துவ சாஸ்திரிகள் இதைப் போல் ஸ்டார் (Pole-Star) என்று கூறுகிருர்கள்.

நீ உன் நகரத்திற்குச் சென்று, சிறிது காலத்திற்குப் பிறகு உன் தந்தையின் அரசை ஏற்றுக்கொண்டு, பல்லாண்டுகள் வரையில் ஆட்சிபுரிந்து, பிறகு நாம் கூறிய பதவியைப் பெற்றுக்கொள்," என்று இயம்பிக் கருடன் மீதமர்ந்தார். கருடன், கண்ணிமைப்பதற்குள் வைகுந்தத்தை நோக்கிப் பறந்து மறைந்தான்.

இலக்குமி மணாளர் மறைந்ததைக்கண்ட துருவன், "என்னே என் அறியாமை! முதல்வரைக் கண்டும் முத்தியைப் பெறாமல் இருந்துவிட்டேனே! நான் மறுபடியுமா நகரத்திற்குச் சென்று அரசு செலுத்தவேண்டும்! இனி என்ன செய்வது! கடவுள் கட்டளைக்கு ஒரு தடையும் இருக்கிறதோ! ஆகையினால், அவர் கூறியவாறே செய்வேன்," என்று தனக்குள் தானே எண்ணினான். பிறகு அவன், மன மகிழ்ச்சியுடன்,

'திருக்கண்டேன்; பொன்மேனி கண்டேன்; திகழும்
அருக்கன் அணிநிறமுங் கண்டேன்;—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன்; புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று.'

—பேயாழ்வார்

என்று பாடிக்கொண்டே வட மதுரையை நோக்கி நடந்தான்.

## 8. துருவன் நகருக்கு வருதல்

'திருமால் கடாட்சமுண் டானல் எவர்க்கும்
சிறப்புண்டு; கனதையுண்டு;
சென்றவழி எல்லாம் பெரும்பாதை ஆய்விடும்;
செல்லாத வார்த்தை செல்லும்;
பொருளொரு துரும்புமரி யாதைஆம்; செல்வமோ
புகல்பெருக் காறுபோல் ஆம்;
புவியில்முன் கண்டுமதி யாதபேர், பழகினவர்
போலவே நேசமாவார்;
பெருமையொடு சாதியில் உயர்ச்சிதரும்; அனுதினம்
பேரும்ப்ர திட்டை உண்டாம்;
பிரியமொடு பகையாளி கூட்வுற வாகுவான்;
பேச்சினில் பிழைவராது;
வருமென நினைத்தபொருள் கைகூடி வரும்அதிக
வல்லமைகள் மிகவுமுண்டாம்;
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே!' —குருபாத தாசர்

துருவன் மகிழ்வுடன் தன் நகரத்தை நோக்கி வரும் போது அவனுடைய முகம் அன்று அலர்ந்த செந்தா மரை மலர்போல மிகவும் பொலிவுற்றிருந்தது. துருவன் காட்டுக்குச்சென்ற நாள் தொடங்கிச் சந்திரனை இழந்த இரவைப்போல அழகற்றிருந்த வட மதுரை, அன்றைய தினம் எல்லா நகரங்களைக் காட்டிலும் சிறந்த நகரமாய் விளங்கியது. நகரத்திற்குத் தொலைதூரத்தில் வேலை செய்துகொண்டிருந்த நகரத்துக் குடிகளுள் சிலர் துரு வனைக் கண்டுவிட்டனர். அப்பொழுது அவனைக் கண்ட

வர்களுக்கு உண்டான களிப்பைப்பற்றி எழுதுவது எட்டுச் சருக்கரையே ஆகும். அவர்கள் உடனே தங்களுடைய வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, விரைந்து சென்று, துருவனுடைய வருகையை மன்னனுக்கு அறிவித்தார்கள்.

இதைக் கேள்விப்பட்டதும் உத்தானபாதன், பிறவிக் குருடன் தன் கண்களைப் பெற்றாற்போலக் களிப்படைந்தான். அவன் தன் புதல்வன் வரவைத் தெரிவித்தவர்களுக்குப் பல பரிசுகள் கொடுத்தான். மந்திரி பிரதானி முதலியவர்களும் மனமகிழ்ந்தார்கள். இந்த நற்செய்தி, பெண்களிருக்கும் அந்தப்புரத்திற்கும் எட்டிற்று. மகனைப் பிரிந்து மனவாட்டம் கொண்டிருந்த சுநீதி இதை யுணர்ந்து,

'இழந்தமணி புற்றர வெதிர்ந்ததெனல் ஆனாள்;
பழந்தனம் இழந்தன படைத்தவரை யொத்தாள்;
குழந்தையை உயிர்த்தமல டிக்குவமை கொண்டாள்;
உழந்துவிழி பெற்றதோர் உயிர்ப்பொறையும் ஒத்தாள்.'

—கம்ப நாடர்

குடிகள் தம் வீடுகளுக்கு வெண்சுண்ணந் தீட்டினார்கள்: தெருக்களிலெல்லாம் புது மணல்கொண்டு வந்து பரப்பினார்கள்; வாழைமரங்களையும் கமுக மரங்களையும் வீடுகளின் வாயில்களில் நாட்டி, அவைகளில் மாவிலைத் தோரணங்களையும், மலர்மாலைகளையும் தொங்கவிட்டார்கள். தெருக்களின் இரண்டு பக்கங்களிலும் அழகிய தொட்டிகளில் பூஞ்செடிகளை வைத்தார்கள். அந்தப் பூஞ்செடிகள் அழகாய்ப் பூத்து, நறுமணத்தை எங்கும் வீசிக்கொண்டிருந்தன.

உத்தானபாதன், நான்கு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் ஏறி உட்கார்ந்தான். குதிரைகள் விரைவாய் ஓடின. அரசனைத் தொடர்ந்து அவனுடைய மனைவியர் களாகிய சுநீதியும் சுருசியும் முத்துச் சிவிகைகளில் ஏறிச் சென்றார்கள். உத்தமனும் அவர்களுடன் சென் றான். அரச குடும்பத்தைச் சூழ்ந்து நகர மாந்தர் பலர் சென்றனர். வலம்புரி சங்கம் மத்தளம் முதலிய மங்கல வாத்தியங்கள் ஒலித்தன. அரசன் சிறிதுநேரத்திற்குள் துருவனைக் கண்டான். உடனே அவன் தனது தேரை விட்டிறங்கித் துருவனைத் தழுவி முத்தமிட்டுக் குலவி னான். துருவன், பிறகு தன் தந்தையை வணங்கினான். அதற்குள் பல்லக்கில் வந்துகொண்டிருந்த சுநீதியும், சுருசியும், உத்தமனும் அங்கு வந்து சேர்ந்தனர். துருவன், தன் தாய்மார்களைக் கண்டு, அன்புடன் வணங் கினான். சுருசிக்கு அப்பொழுது அளவில்லாத ஆனந் தம் உண்டாயிற்று. அவள் துருவனை அன்போடு கட்டித் தழுவி,

'உன்னையான் ஒன்றும் உணரா துரைத்தவெலாம்
பொன்னமரும் மார்ப பொறு.' —புகழேந்திப் புலவர்

என்று கூறி, முத்தமிட்டாள். கடவுளின் திருவருளைப் பெற்றவர்களைக் கண்டு களிக்காதவர்களும் இவ்வுலகத் தில் இருக்கின்றார்களா?

பிறகு துருவன், தன்னைப் பெற்றெடுத்த அன்னையை நோக்கினான். அவள், அவனை எடுத்துத் தன்னுடைய மடியிலமர்த்தி, மகிழ்வடைந்தாள். அப்பொழுது அவ ளுடைய முகம் சூரியனைக்கண்ட தாமரை மலர்போல அழகுடன் விளங்கியது. அவளுடைய கண்களிலிருந்து

உவகைநீர் பொங்கி வழிந்தது. அதன்பிறகு உத்தமன், துருவனுடைய பாதங்களில் விழுந்து வணங்கினான்.

'தாமரைத் தடக்கை கூப்பித்
தாள்முதல் கிடந்த தம்பி
தாமரைத் தடத்தை ஒத்தான்;
தமயனும் பரிதி ஒத்தான்;
தாமரைக் குணத்தி னானை
மும்முறை தழுவிக் கொண்டு
தாமரைச் செங்கணானும்
தன்னுறு பரிவு தீர்த்தான்.'

—திருத்தக்க தேவர்

பிறகு அக்குடும்பம் குதூகலத்துடன் நகரத்திற்குத் திரும்பிச் சென்றது.

## 9. உத்தானபாதன் துறவு

'மார்பினும் அகன்ற கல்வி,
வனப்பினும் நிறைந்த சீர்த்தி,
போர்வரு தெரியல் மாலைப்
புயத்தினும் உயர்ந்த கொற்றம்,
சீர்வரு வாய்மை மிக்க
கண்ணினும், செங்கை வண்மை
பார்வளம் சுரக்கும் செல்வப்
பரப்பினும் பரந்த அன்றே.'

—வில்லிபுத்தூரார்

உத்தானபாதன், தன்னுடைய புத்திர சிகாமணியாகிய துருவனுக்கு வித்தைகளைக் கற்பிக்கத் தகுந்த ஆசிரியர்களை ஏற்படுத்தினான். அவர்கள் துருவனுக்கு

முறைப்படி அரசர்களுக்கு வேண்டும் வித்தைகளைக் கற்பித்து வந்தார்கள். துருவன், மன்னர்களுக்கு இன்றியமையாத வாட்போர் புரிதல், மல் யுத்தஞ் செய்தல், வில் போர் புரிதல் முதலிய தொழில்களில் தேர்ச்சிபெற்று விளங்கினன். தவிர, யானையேற்றம், குதிரையேற்றம், செண்டாடுதல் முதலிய அருமையான வித்தைகளையும் அவன் அதிக ஆவலுடன் கற்றுக்கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல அவனுடைய நற்குணங்கள் உயர்வதைக் கண்ட குடிகள் எல்லாரும் அவனைப் பலவிதமாகப் புகழ்ந்து பேசினர்கள். அவனும் குடிகளிடத்தில் பேரன்பு கொண்டான். அவன் அப்பொழுதே குடிகளுக்கு நேரிடும் இன்ப துன்பங்களைத் தனக்கு நேர்வனவாகக் கருதி வந்தான். இந்தச் சிறந்த குணம் ஒன்றே குடிகளுக்கு அவனிடத்திற்குறையாத அன்பை உண்டாக்கிவிட்டது. அவன், பதினறு வயதுள்ள வாலிபப் பருவத்தை அடைந்து, இளஞ்சிங்கத்தைப் போன்று விளங்கினன்.

'பிறந்தவர் இறப்பர்; இறந்தவர் பிறப்பர்,' என்னும் கொள்கையை உலகம் நிலை நாட்டுகிறது. இதனல் தோன்றிய உடலுக்கு அழிவுண்டு என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்குகிறது. ஆகையால், அந்த உடலைப் பெற்றபோதே உயிர்கள் பெறுவதற்கு விரும்பும் பயனை முயற்சி செய்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினேமல்லவா?

ஒருவனுடைய குழந்தைப் பருவம், நன்மை இன்னதென்றும், தீமை இன்னதென்றும் அறிந்துகொள்ள முடியாத பருவமாய் இருக்கிறது; பிள்ளைப் பருவம் விளையாட்டையே விரும்பி நிற்கிறது; வாலிபப் பருவந்தான்,

உலக இன்பங்களை வகையறிந்து அனுபவிப்பதற்கு ஏற்ற பருவம். அதை வீணில் செலவிடாமல் ஒருவன் செய்ய வேண்டுவது என்ன? அவன் தன் மனத்திற்கு இனிய மங்கையை மணந்து, அவளுடன் ஒரு மனப்பட்டு, வீட்டிற் செய்யவேண்டுங் கடமைகளை ஒழுங்காகச் செய்து வரவேண்டும். அப்படிச் செய்து வருவதற்குச் சிறந்த வழிகள், முன்னோர்களால் கூறப்பட்டுள்ள நீதி போதனைகளேயாகும். அந்த நீதிகளைப் பின் பற்றி, அவன் நடக்க வேண்டும். உள்ளதை ஒளியாமல் மற்றவர்களுக்குக் கொடுத்துதவுதல், தன் சுற்றத்தாரைத் தழுவிப் பாதுகாத்தல் ஆகிய இவைகள் இல்லறம் நடத்துகிறவனுக்குரிய முக்கியமான தொழில்கள். இந்தத் தொழில்களைக் குறைவில்லாமல் செய்து முடித்த வாலிபன், மறுமைக்குரிய இன்பத்தை அனுபவிக்கப் பாத்திரனாக வேண்டும். உலகத்திலுள்ள பொருள்களின் மீதுள்ள ஆசையை அடியோடு நீக்கிக் கடவுளைக் கருதி வழிபடுவது பேரின்ப வீட்டை அடைவதற்குத் தகுந்த வழியாகும்.

உத்தானபாதன், இந்த முறைகளை நன்றாக அறிந்தவன். ஆகையினால், அவன் தன்னுடைய ஆட்சியைத் துருவனுக்கு அளித்துவிட்டுக் காட்டுக்குச் சென்று, கடவுளைக் குறித்துத் தவம் செய்யக் கருதினான். ஒரு நாள் அவன், சிறந்த அறிவாளர்களாகிய தன்னுடைய மந்திரிகளிடத்தில் தன்எண்ணத்தைவெளியிட்டான். அமைச்சர்கள் அதற்கு உடன்பட்டார்கள். உடனே அரசன் தன் புத்திரனுக்கு முடி சூட்டுவதற்குச் செய்ய வேண்டிய காரியங்களை விரைவிற்செய்து முடிக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டான். மந்திரிகள், அவன் கட்டளை

யின்படி நாட்டை அலங்கரிக்கத் தொழிலாளிகளுக்கு உத்தரவிட்டார்கள். அத்தொழிலாளிகளுட்சிலர், நகர முழுவதும் பந்தலிட்டு, விதவிதமான தோரணங்களைக் கட்டினர்; சிலர் அந்தப் பந்தலுக்கு வெண்பட்டு முதலிய வைகளைத் தைத்து, முத்துகளாலும் மணிகளாலும் பல வித அழகிய உருவங்களையும் தைத்தனர்; சிலர் அந்தப் பந்தலில் இடையிடையே மலர் மாலைகளைத் தொங்க விட்டனர். வடமதுரையை இவ்வாறு அலங்கரித்த பிறகு அவர்கள் அரசனுக்கு இதை அறிவித்தார்கள். உத்தானபாதன், துருவனுடைய முடி சூட்டைக் குறித்துச் சிற்றரசர்களுக்கும், சக்கரவர்த்திகளுக்கும் திருமுகம் எழுதி அனுப்பினுன். அந்தத் திருமுகத்தைப் பெற்ற மன்னர்களும் மற்றவர்களும் பலவகைப்பட்ட வரிசைகளுடன் வடமதுரைக்கு வந்து சேர்ந்தார்கள். அறிவிற்சிறந்த புலவர்களும் முனிவர்களும் அரசனுடைய அரண்மனையை அடைந்தார்கள்.

துருவன், நீராடி, ஆடை ஆபரணங்களை அணிந்து கொண்டான். யானைப் பாகன், பட்டத்து யானையைச் சிங்காரித்துக்கொண்டு வந்து, அரண்மனை முன் நிறுத்தினுன். துருவன் திருமாலைச் சிந்தித்து, அந்த யானையின் மேலிருந்த அம்பாரியில் ஏறி உட்கார்ந்தான். மங்கல வாத்தியங்கள் முழங்கின. யானை ஊர் வலம் வரப் புறப்பட்டது. மன்னர்கள், துருவனைத் தொடர்ந்து, வரிசை வரிசையாகக் குதிரைகளின் மேலும், பல்லக்குகளிலும் ஏறிச்சென்றூர்கள். பெண்டிர் எல்லாரும் துருவனுக்குக் கற்பூர ஆரதி முதலியவை எடுத்துத் திருஷ்டி கழித்தார்கள். ஊர் வலம் முடிந்தது. துருவன் முடிசூட்டு மண்டபத்தில் வந்திறங்கினுன். முடிசூட்டுக்குரிய வேளை

யும் நெருங்கியது. பிறகு மங்கல வாத்தியங்கள் முழங்கின. புலவர்கள் துருவனுக்கு முடிசூட்டு வாழ்த்துப் பாடினார்கள். துருவன், மணி முடி தரித்துச் செங்கோலைக் கையிலேந்திச் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். குடிகளெல்லாரும், 'நம் மன்னன் நீடூழி வாழ்க!' என்று வாழ்த்திக் களிப்படைந்தார்கள். சுநீதியும் சுருசியும் அளவில்லாத ஆனந்தங் கொண்டனர். உத்தமன் கொண்ட சந்தோஷத்தை இவ்வளவென்று எடுத்துக் கூற இயலாது.

பிறகு, எல்லாரும் மண்டபத்திலிருந்து எழுந்தனர். உத்தானபாதன், சிற்றரசர்களுக்கும் மற்றவர்களுக்கும் தகுந்தபடி விருந்தளித்தான். குடிகளுக்கும், துருவனுடைய முடிசூட்டுக்கு அறிகுறியாக, அரசன் செய்ய வேண்டிய நன்மைகளைச் செய்தான். வேந்தரெல்லாரும் விருந்துண்டு, ஆடல் பாடல் முதலிய கேளிக்கைகளைக் கண்டும் கேட்டும் ஆனந்தித்துச் சில நாட்களுக்குப் பிறகு தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள்.

உத்தானபாதன், அரசுக்குரிய எல்லா விஷயங்களையும் துருவனுக்கு விளங்கக் கூறினான்; பிறகு, அவன் அரசு செலுத்தும் முறையைச் சில நாட்கள் வரையில் அவனுடன் இருந்து கவனித்து வந்தான். துருவன் குறையின்றி அரசு புரிவதைக் காண அவனுக்குக் குதூகலம் உண்டாயிற்று. ஆகையினால், அவன் தன் ஆடை அணிகளைக் களைந்துவிட்டு, மரவுரியுடுத்துத் தவஞ் செய்யக் காட்டிற்குச் சென்றான்.

## 10. துருவன் திருமணம்

'தாயொக்கும் அன்பில்; தவமொக்கும்
நலம்ப யப்பின்;
சேயொக்கும் முன்னின் றொருசெல்கதி
உய்க்கும் நீரால்;
நோயொக்கும் என்னின் மருந்தொக்கும்;
நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவொக்கும்
எவர்க்கும் அன்னான்.'

—கம்ப நாடர்

துருவன் தன்னுடைய குடிமக்களுக்கு எவ்வகையிலும் குறைவு நேராதபடி அரசு புரிந்து வந்தான். 'குடிகளுக்குத் தாய் கோற்றவன்,' என்பதை அவன் தன்னுடைய செய்கையால் நிலை நாட்டினன். குடிகள், தங்களுக்கு உற்ற குறைகளைத் தாங்களே நேரிற் சென்று, அரசனைக்கண்டு அறிவித்து, அவற்றிற்குத் தகுந்த நன்மைகளை அடைந்து வந்தார்கள். துருவன், தன் சபையில் பல புலவர்களை அமர்த்தி ஆதரித்து வந்தான். போரில் சிறந்த வீரர் பலர் அவனிடம் இருந்தனர். ஆகையினால், அவனுடைய சேனைகள் மிகுந்த வன்மை பெற்றிருந்தன. அதைப்பற்றிக் கேள்விப்பட்ட அயல் தேசத்து அரசர்கள், அவன்மீது படையெடாமல் புலியைக் கண்ட பூனைகளைப்போலப் பதுங்கியிருந்தார்கள். அனேக சிற்றரசர்கள் அவனுடைய ஆண்மையையும் நற்குணங்களையும் கண்டு வியந்து, அவனுக்கு விருப்பத்துடன் கப்பங்கட்டி வந்தார்கள். அவனுடைய ஆட்சி முறையில் குற்றம் புரிந்தவர்கள் கண்ணோட்ட

மில்லாமல் தண்டனை அடைந்து வந்தார்கள். அதனால், குற்றம் பெருகுவதற்கு இடமில்லாதிருந்தது. குடிகளெல்லாரும் கல்வியும் செல்வமும் பெற்றுக் களித்திருந்தார்கள்.

துருவன், தன் உரிய பருவத்தில் அழகிலும் அறிவிலும் சிறந்த இரண்டு அரச குமரிகளைத்தேடி மணம் புரிந்துகொண்டான். அந்தப் புனிதவதிகள் கணவனைத் தெய்வமாகக் கருதி வந்தார்கள். தங்களுடைய மணாளனுடைய மொழிகளே அவர்களுக்கு மறை மொழிகளாகும். அவர்கள் பிறப்பில் அரச குமரிகளாய் இருந்தபோதிலும், செய்கையில் பணிப் பெண்களைப் போல அவனுக்குக் குற்றேவல்களைச் செய்து வந்தார்கள். 'இரு மனைவியரை மணப்பவன் துன்பமடைவான்,' என்னும் உலக வழக்குத் துருவனிடத்திற் பொய்த்தது.

இவ்விதக் குணக் குன்றுகளாகிய தன் இரண்டு மனைவியரோடும் துருவன், பூவும் அதன் மணமும் போலப் பொருந்தி வாழ்ந்து வந்தான். சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்தப் பெண் மணிகள் இருவரும் மூன்று புத்திரர்களைப் பெற்றார்கள். மூத்தவளுக்குக் கற்பன், வற்சரன் என்னும் இரண்டு புத்திரர்களும், இளையவளுக்கு உற்கலன் என்னும் ஒரு புத்திரனும் பிறந்தனர். துருவன், தன் குமாரரைக் கண்டு, பெரிதும் மகிழ்ந்தான். பிறகு அவன், அவர்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகள் எல்லாவற்றையும் முறையே செய்து முடித்தான். மைந்தர் மூவரும் வளர்பிறைச் சந்திரனைப்போல வளர்ந்து வந்தனர். இது நிற்க.

## 11. உத்தமன் மரணம்

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு.' —திருவள்ளுவர்

உத்தமன், தன் தமயனாகிய துருவனுடன் இராச்சிய காரியங்களைப் பார்த்து வந்தான். அவனுக்குச் சேனைகளைப் பழக்குவதிலும் காட்டுக்குச் சென்று வேட்டையாடுவதிலும் விருப்பம் அதிகம். அனேக ஆண்டுகள் அவனுக்கு இன்பமாய்க் கழிந்தன. அவன் ஒரு நாள் தன் வழக்கப்படி வேட்டைக்குச் செல்லக் கருதி, அதற்கு வேண்டுங் கருவிகளுடனும் சில வேட்டையாட்களுடனும் காட்டிற்குச் சென்றான். அங்குச் சென்று, அவனும் அவனுடைய வேட்டையாட்களும் பல விலங்குகளைக் கொன்றும், சிலவற்றைக் காயப்படுத்தியும் வேட்டையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வலி மிகுந்த மிருகம் ஒன்று அவர்களுடைய அம்புக்குத் தப்பியோடத் தலைப்பட்டது. உத்தமனும் சில வேட்டையாட்களும் அதைத் துரத்திக்கொண்டே நெடுந்தூரம் ஓடினார்கள். அந்த மிருகம் விரைவாய் ஓடி மற்றொரு காட்டிற் புகுந்தது. அந்தக் காடு, அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனுடையது. குபேரன், அந்தக் காட்டினுள் மற்றவர்கள் புகாதபடி காவல் புரிய ஓர் ஏவலாளனை ஏற்படுத்தியிருந்தான். அந்தக் காவலாளி, பிறப்பில் இயக்கன். அவன் பெயர் புண்ணியாசன் என்பது. அவன் அந்தக் காட்டில் ஒரு பக்கத்தில் காவல் புரிந்துகொண்டிருந்தான்.

உத்தமனும் அவனுடைய ஆட்களும், தங்களைத் தப்பியோடிய மிருகம் அந்தக் காட்டினுள் புகுந்ததைக் கண்டார்கள். உத்தமன், அதை எவ்விதத்திலாகிலும் கொல்லுவதே சரி என்று தீர்மானித்துக்கொண்டான். ஆகையினால், அவன் தன்னுடைய ஆட்களுடன் அந்தக் காட்டினுட்புகுந்தான். காட்டினுள் புகுந்த மிருகம் அவர்களுடைய கண்ணுக்குத் தோன்றாமல் மறைந்தது. உத்தமனும் அந்த மிருகத்தை இனிக் கண்டு பிடிப்பது முடியாத காரியம் என்பதை உணர்ந்தான். ஆனபோதிலும் அவனுடைய எண்ணம் திடீரென்று மற்றொன்றின் மீது சென்றது. அங்குப் பல மிருகங்கள், இங்குமங்கும் இடைவிடாமல் ஓடிக்கொண்டிருந்ததை அவன் கண்டான். உடனே அவைகளை வேட்டையாட வேண்டும் என்னும் எண்ணம் அவனுக்கு உதித்தது. அவன் தன் ஆட்களுடன் கூடி, வேட்டையாட ஆரம்பித்தான்,

வேட்டையாட்கள் மிருகங்களைக் கூட்டுவதற்காகப் பெருங் கூச்சலிட்டார்கள். அந்தப் பெருங் கூச்சல் காவலாளியாகிய புண்ணியாசன் என்பவன் காதில் விழுந்தது: உடனே அவன், தன் காவலைமீறி வனத்தினுள் புகுந்து விலங்குகளைக் கொல்லும் உத்தமனையும், அவனுடைய ஆட்களையும் பார்த்துவிட்டான். அவன், அவர்களிடஞ்சென்று, காட்டை விட்டு வெளிச் செல்லும்படிக் கூறினான். அவர்கள், அவனுடைய சொல்லுக்குச் செவி கொடாமல், தங்கள் காரியத்திலேயே கண்ணாய் இருந்தார்கள். ஆகையினால், அவனுக்குக் கோபம் அதிகமாயிற்று. உடனே அவன், தன் குலத்தவர் சிலரைக் கூவி அழைத்து, அவர்களுடைய உதவியினால் உத்தமனையும் அவனுடைய ஆட்களையும் எதிர்த்தான்.

இருதிறத்தினர்க்கும் இடையில் பெரும்போர் தொடங்கியது. அந்தப் போரில் ஓரியக்கன் உத்தமனைக் கொன்று விட்டான்.

தம்முடைய தலைவன் உயிர் துறந்ததைக் கண்ட வேட்டையாட்கள் வெருண்டு, நாற்புறங்களிலும் ஓடினார்கள். சிலர் பின்னும் வீராவேசத்தோடு இயக்கர்களுடன் போர் செய்து உயிர் விட்டனர். உயிருக்குப் பயந்து ஓடினவர்களுள் ஒருவன், 'வடமதுரைக்குச் சென்று, அரசனிடத்தில் செய்தியைத் தெரிவிப்போம்.' என்று எண்ணி, அரண்மனையை அடைந்தான். அப்பொழுது சுருசி, ஆனந்தத்துடன் அரண்மனையை அடுத்த பூஞ்சோலையில் உலவிக்கொண்டிருந்தாள். அவள், மெய் சோர்ந்து ஓடிவரும் வேட்டையாளைக் கண்டு, அவன் அவ்வாறு ஓடி வருவதற்குக் காரணத்தை வினவினாள். அவன், பயத்தினால் தேகம் நடுங்க, அவள் முன்னிலையில் நின்றான். நடந்ததைக் கூற அவனால் முடியவில்லை. பிறகு சுருசியின் இடைவிடாத கேள்விகளுக்குப் பதிலளிக்க வெண்ணிக் குழறிய வார்த்தைகளால் உத்தமன் இறந்துவிட்ட செய்தியை அவளுக்குத் தெரிவித்தான். அவள் அதைக் கேட்டதும் வாய்விட்டலறி, அனலிடைப்பட்ட புழுப்போலத் துடித்தாள்; மாணிக்கத்தை இழந்த நாகம்போல மனம் புழுங்கினாள். பிறகு அவள், அச்செய்தியைத் தனக்குத் தெரிவித்தவனையும், மற்றுஞ்சில வேலையாட்களையும் உடன் அழைத்துக்கொண்டு, தன் செல்வப் புத்திரன் மடிந்த இடத்திற்குச் சென்றாள். அவள், உத்தமன் பூமியின்மீது தலைவிரி கோலமாய் வெட்டுண்டு விழுந்து கிடந்ததைக் கண்டாள்; கண்டதும், உலகத்தையே மறந்து, பெருமூச்

செறிந்து, கீழே விழுந்தாள். பிறகு அவள் ஒருவாறு உணர்வடைந்து, இறந்து கிடந்த தன் புத்திரனை வாரி யெடுத்து, மடிமீதிருத்தி, 'ஐயோ! நான் என்ன செய்வேன்! உத்தம! என் அருமைப் புத்திர! இனி நானுன்னை என்றைக்குக் காண்பேன்! நாட்டில் மந்திரி பிரதானிகள் சூழக் கொலுவிருக்க உன்னைக் கண்டு களிக்க எண்ணிய என் பாழுங்கண்கள், நரியும் கழுகும் அலைந்துகொண்டிருக்கும் இக்காட்டில் நீ தனியே உயிரிழந்து மண்ணில்மேல் கிடப்பதைக் காணவோ கொடுத்து வைத்தன! பாவியாகிய நான் இவ்விதம் வருந்த வேண்டும் என்று பிரமனுடைய எழுத்து இருந்ததோ?

'வானின் றிழிந்து சொரிகின்ற தாரை
மழைபோல விழ விழிநீர்,
ஊனின்றி மேனி உதிரங்கள் சிந்த
உயிரின்றி, வெம்பு தழலின்
மேனின் றுவெந்த தளிர்போல் உயங்கி,
விதியாரை நொந்து தனியே
யானின் றிரங்க 'என்?' என்ப தில்லை;
இதுவோஉன் நீதி? மகனே!'

'கனமும் தருக்கள் குலமும் தரித்த
கரமும், பெருத்த உரமும்,
தினமும் சிறக்கும் முகமும் தரித்த
சிகையும் கிடைக்கும் முறைகண்
டினமும் தரித்த துயிரா னபாவி
இறவாமல் என்றன் மகனே!
மனமும் தரிப்ப திலைநொந்து பெற்ற
வயிறும தரிப்ப திலையே!'

—நல்லூர் வீரக் கவிராயர்.

என் கண்மணி, உன்னை இழந்து நான் இனி இந்த உலகத்தில் இருந்து என்ன பயன்? நானும் உன்னுடன் இந்த உடலை அழித்துவிடுகின்றேன்.'' என்று பலவாறு துன்பம் நிறைந்த சொற்களைக் கூறி, மைந்தனுடன் தானும் உயிர்விட நிச்சயித்தாள்.

உடனே அவள் தன்னருகிலிருந்த சில பணியாட்களைக் கூப்பிட்டுப் பெருந்தீயொன்றை வளர்த்தும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டாள். அவர்கள் அவ்விதமே காட்டில் உலர்ந்து கிடந்த பலவகைப்பட்ட மரங்களைத் தறித்து வீழ்த்தித் தீ மூட்டினார்கள். நெருப்பு மிகவும் ஓங்கிக் கொழுந்து விட்டு எரிந்தது. சுருசி, கடவுளை வணங்கித் தன் புத்திரனாகிய உத்தமனுடைய தேகத்தை எடுத்து, அந்தத் தீயில் கிடத்தினாள்; பிறகு தானும் அதிற்பாய்ந்து இறந்தாள்.

அந்தோ! பாவம்! பாவம்! பெரிதும் பாவம்! சுருசியின் எண்ணங்களெல்லாம் இறுதியில் இப்படியா முடியவேண்டும்! மனிதர்கள் எண்ணுங் காரியங்கள் யாவும் அவர்கள் எண்ணியபடி நிறைவேறுகின்றனவா? 'நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்.' என்று பெரியார்கள் கூறும் வார்த்தை பொய்க்குமா?

'மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.' —திருவள்ளுவர்

என்று பொய்யாமொழிப் புலவர் கூறியது சுருசியிடத்தில் மெய்யாயிற்று.

## 12. துருவன் பதம் பெறுதல்

கூடப் பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகம் தஞ்சுகமெனக்
கொண்டுதாம் தேடுபொருள் அவர்தேடு பொருளவர்
கோதில்புகழ் தம்புகழெனத்
தேடுற்ற அவர்நிந்தை தம்நிந்தை தம்தவம்
தீதிலவர் தவமாமெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன ஐந்தலைச்
சீறரவ மணிவாய்தொறும்
கூடுற்ற இரையெடுத் தோருடல் நிறைத்திடுங்
கொள்கைபோல் பிரிவின்றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதருமமாம்.
ஆடிச்சி வந்தசெந் தாமரைப் பாதனே!
அண்ணல்எம தருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அரப்பளீச் சுரதேவனே!

—அம்பலவாணக் கவிராயர்

உத்தமனைக் கொடிய இயக்கர்கள் கொன்றார்கள் என்பதையும், சுருசி தன் புத்திரனுடைய பிரிவாற்றுமை யால் அவனுடன் தீயில் குதித்து மடிந்ததையும் துருவன் வேட்டை ஆட்களால் அறிந்தான். துருவனுக்கு உத்தம னிடத்தில் அளவில்லாத அன்பு உண்டு. ஆகையினல், அவன் தன் தம்பி இறந்ததைக் கேள்விப்பட்டவுடன் கழிபெருந் துன்பம் அடைந்தான். அவனுக்குத் தன் தம்பியைக் கொன்ற இயக்கர்களின்மீதில் கோபம் பொங்கி எழுந்தது. உடனே அவன் அந்த இயக்கர்

களின் குலத்தைக் கருவறுக்க நிச்சயித்தான். அதனால், அவன், பெருஞ்சேனை யொன்றைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு அக்காட்டிற்குச் சென்றான்.

துருவனுடைய சேனையில் போர் முரசம் முழங்கியது. குபேரன், அந்தப் போர்முரசத்தின் ஒலியைக் கேட்டுத் தனக்குப் பகைவனான ஓர் அரசன் தன்மீது படையெடுத்து வந்திருக்கின்றான் என்பதை உணர்ந்தான். உடனே அவன், காலத்தைப் போக்காமல், தன்னுடைய படையைச் சித்தப்படுத்தினான். இருவர் படைகளும் ஓரிடத்திற் சந்தித்துப் போர்புரியத் தொடங்கின. குபேரனுடைய படை வீரர் பலரும் இயக்கரே. துருவனுடைய சேனையிலிருந்த வீரர்கள் அந்த இயக்கர்களுள் அனேகரைத் தங்களுடைய வாட்களுக்கு இரையாக்கினார்கள். போர்க்களத்தில் உதிரம் ஆறாய்ப் பெருகியது. அந்த இரத்த ஆற்றில், இயக்கர்களுடைய முண்டங்களும் தலைகளும் உருண்டன. சில தலையற்ற உடல்கள் கைகளிற்பிடித்த போர் வாட்களுடன் மிகுந்த வீராவேசத்தோடு அந்தக் களத்தில் நின்று, கூத்தாடிக் கொண்டிருந்தன. அவைகளைக் கிழித்து, அவைகளின் மாமிசத்தைத் தின்ன விரும்பி, நரிகள் இங்குமங்கும் ஊளையிட்டுத் திரிந்துகொண்டிருந்தன. அவைகள் அவ்வாறு ஊளையிட்டுக்கொண்டிருந்தது, துருவனுடைய வெற்றிக்கு வியந்து, பரணி என்னும் ஒருவகைப் பிரபந்தத்தைப் பாடுவதுபோல இருந்தது. கழுகுகள் அந்தப் போர்க்களத்தில் பந்தரிட்டதுபோல உயரப் பறந்து கொண்டிருந்தன. அந்தப் போரைத் தேவரெல்லாரும் அதிக ஆச்சரியத்துடன் விண்ணிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தனர். அவருள் சுவாயம்பு மனு என்பவரும்

ஒருவராவர். அவர்தாம் உத்தானபாதனுடைய தந்தை யார். அவர் நற்பதவியைப் பெற்று, விண்ணுலகத்தில் அழியாத இன்பத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார். உத்தானபாதனைப் பெற்ற உத்தமர் ஆகையால், அவர் துருவனுக்குப் பாட்டனாராவர்.

சுவாயம்பு மனு தம்முடைய பெயரன் புரியும் கடும் போரைத் தடுக்கக் கருதினார். ஆகையால், அவர் உடனே விண்ணிழி விமானம் ஒன்றிலமர்ந்து, துருவன் போர்புரியும் இடத்திற்கு வந்தார். அப்போது துருவன், இரத்தக் கறைகொண்ட கத்தியைத் தன் கரத்திற்பிடித்துப் பகைவர்களின் வருகையை எதிர்பார்த்து நின்றான். சுவாயம்பு மனு, அரச சிங்கமாகிய அவனைப் பார்த்து, "ஒருவனுக்கு உண்டாகும் இன்ப துன்பங்கள், அவனுடைய ஊழின் பயனால் உண்டாகின்றன என்பதை நீ அறியாயா? அவ்விதமிருக்க, நீ உன் தம்பியை ஓரியக்கன் கொன்றான் என்று கோபித்து, எண்ணற்ற இயக்கர்களைக் கொன்றாய்; இனியும் அவ்விதமே செய்யக் கருதி நிற்கிறாய். இஃது என்ன விபரீதம்! 'அவனன்றி ஓரணுவும் அசையாது,' என்பது பொய்யாகுமா! நீ இவ்வாறு செய்வது சரியன்று. உன் பாட்டனாகிய நான் கூறும் வார்த்தைகளை அவமதிக்காதே. போரை நிறுத்தி, நீ உன் ஊருக்குத் திரும்பிச் செல். உனக்கு எல்லா நன்மைகளும் உண்டாகட்டும்," என்று கூறினார்.

வந்தவர் தன் பாட்டனார் என்பதை அறிந்த துருவன் அவரை வணங்கினான். பிறகு, 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்,' என்னும் முதுமொழியைத் தன்மனத்துட் சிந்தித்து, அவன் தன் பாட்டனார் கூறியபடியே செய்வதாகச் சம்மதித்தான். சுவாயம்பு மனு, அவ

னுடைய நற்குணத்திற்கும் வீரத் தன்மைக்கும் வியந்து, மனமகிழ்ந்து, வந்த வழியே திரும்பிச் சென்றூர்.

பின்பு, அளகாபுரிக்கு அரசனுகிய குபேரன், துருவனிடம் வந்து, கொற்றவ, நீ சீற்றம் கொள்வது அடாது. உன் தம்பியை என் பணியாட்களாகிய இயக்கர்கள் கொலை புரிந்தார்கள் என்னும் எண்ணத்தை நீ விட்டுவிடு.

‘ஆவது விதியெனின் அனைத்தும் ஆயிடும்;
போவது விதியெனின் எவையும் போகுமால்;
தேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ,
ஏவரும் அறியொணு ஈசற் கல்லதே?’

—கச்சியப்ப சிவாசாரியார்

தவிர, உன்னுடைய வீரமும், சகோதர வாஞ்சையும் மிகவும் போற்றத் தகுந்தவை. நான் அளகாபுரிக்கு அரசன். என் பெயர் குபேரன் என்பது. நீ உனக்கு வேண்டும் வரம் ஒன்றைக் கேள். தடையின்றி நான் அதை உனக்குத் தருகின்றேன்,’ என்று மொழிந்தான்.

துருவன், குபேரனை வணங்கி, “அளகாபுரிக்கு அரசரே, திருமாலுக்கு அடியவனுய் இருப்பதைத் தவிர, அடியேன் விரும்பத் தகுந்த வரம் யாது?” என்று கூறக் குபேரன், “சரி; அப்படியே ஆகட்டும்,” என்று கூறிச் சென்றுன்.

துருவன், ‘எல்லாம் கடவுட் செயல்,’ என்பதை உணர்ந்து, உத்தமனுடைய கால கதியை உன்னியுன்னிக் கண்ணீர் விட்டான். பிறகு அவன், ‘ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும், மாண்டார் மீண்டும் உயிர் பெற்று வருவாரோ?’ என்பதை அறிந்து, ஒருவாறு மனந்தேறித் தன்

னுடைய சேனையுடன் வட மதுரைக்குத் திரும்பிச் சென்றான். அவன், அவ்விடத்தில் பல்லாண்டுகள் வரையில் அரசுபுரிந்து, பிறகு தன் மூத்த குமாரனாகிய கற்பன் என்பவனுக்குப் பட்டஞ் சூட்டிவிட்டுத் தவக்கோலம் பூண்டு, காட்டிற்குச் சென்றான்.

அவன் காட்டை அடைந்ததும், பொன் மயமான விமானம் ஒன்று ஆகாயத்திலிருந்து கீழிறங்குவதைக் கண்டான். அவ்விமானம் கீழிறங்கி வந்தது, இளஞ் சூரியன் ஆகாயத்தைவிட்டுப் பூமிக்கு வந்ததைப்போல இருந்தது. சுனந்த நந்தர்கள் என்னும் இரண்டு தேவ தூதர்கள் அதைத் தாங்கி வந்தார்கள். அவர்கள் அந்த விமானத்தைக் கீழிறக்கியதும் துருவனை நோக்கி, "ஐய, உங்களை இவ்விமானத்தில் ஏற்றிக்கொண்டு வரும்படி தெய்வ கட்டளை பிறந்திருப்பதால் நீங்கள் எங்களோடு விண்ணுலகத்திற்கு வரவேண்டும்," என்று பணிவுடன் கூறி நின்றார்கள்.

துருவன், அவர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, ஒளியுருப் பெற்று, விமானத்திலேறினான். உடனே, அவ்விமானத்தைத் தூதர்கள் விண்ணுலகத்திற்குத் தாங்கிச் சென்றார்கள். அவர்கள் அதைத் தாங்கிச் செல்லுகையில் துருவன், தன்னைப் பெற்றெடுத்த புனிதவதியாகிய சுநீதியைத் தன் மனத்திலெண்ணினான். அவனுடைய கருத்தை உணர்ந்த சுனந்த நந்தர்கள், அவனைப் பார்த்து, "ஐய, நாம் அங்குச் செல்வதற்குள் உம்முடைய அன்னையாரும் அங்கு வந்திருப்பார்," என்று கூறினார்கள்.

சிறிது நேரத்திற்குள் விமானம் விண்ணுலகத்தை அடைந்தது. துருவன், அவ்விடத்தில் தன் தாய் தந்தை

முதலாயினர் அழியாத இன்பத்தை அனுபவித்துக் கொண்டு அகமகிழ்ந்திருந்ததைக் கண்டு களித்தான். பிறகு அவன், தேவர்களும் அடைவதற்கு அரியதும், மேருகிரியின் உச்சியில் நிலை பெற்றதுமான நட்சத்திரத்துடன் ஒளியாய் மாறிக் கலந்தான். தேவர்களும் அவனை வாழ்த்தினர்கள். இந்த மகானே இன்று ஆகாயத்தில் துருவ நட்சத்திரமாகப் பிரகாசிக்கின்ருன் என்று நூற்கள் சொல்லும்.

கண்ணன்ருன் என்றும் கருதுமினே மாந்தர்காள்!
எண்ணிலின்பம் மேவும் இனிது.

## செய்யுள்

### அருஞ்சொற் குறிப்பு

பக்கம் 3. 'நிலமகள் முகமோ' என்னும் பாட்டு:

நில மகள்—பூமி தேவி; திலகம்—பொட்டு; மங்கல நாண்—திருமாங்கல்யம்; இலகும்—விளங்குகின்ற; ஆரம்—முத்து மாலை; உயிரின் இருக்கை—இருதயம் (Heart); மலர் மகள்—இலக்குமி; மணி—இரத்தினம்; வானோர்—தேவர்கள்; ஊழியின் இறுதி—பிரளய முடிவு; உறையுள்—வசிக்குமிடம்.

பக்கம் 5. 'மாநிலங் காவல னவான்' என்னும் பாட்டு:

இடையூறு—துன்பம்; பரிசனம்—சுற்றத்தார், ஏவலாளர்கள்; ஊனம்—துன்பம்; உயிர் தம்மால்—மிருகம் முதலியவைகளால்.

பக்கம் 6. 'குடிதழீஇக் கோலோச்சும்' என்னும் பாட்டு:

உலகு—உலகத்தார் (இடவாகு பெயர்): தழீஇ—தழுவி, அணைத்து; கோலோச்சும்—செங்கோலைச் செலுத்தும்; அடிதழீஇ—தாளைத் தழுவி; நிற்கும்—நிற்பார்கள்.

பக்கம் 8. 'பொன்னுடைய ரேனும்' என்னும் பாட்டு.

புக்கு—அருகில் வந்து; அடிசில் சோறு; அளையும்—பிசையும்; பூ நாறும்—(செவ்வல்லி) மலரை யொத்த; செய்ய—சிவந்த; மக்கள்—பிள்ளைகள்; பொன்—செல்வம்.

பக்கம் 13. 'காவியங் கண்ணும் மூடா' என்னும் பாட்டு

காவி—கருங்குவளை மலர்; கவிர்—முள் முருக்கம்பூ; இதழ்—உதடு; வாவி—குளம்; வதனம்—முகம்; நுதல்—

நெற்றி; தூவியந்தோகை நல்லார் மயிலைப் போன்ற—பெண்கள்; ஓவியம்—சித்திரம்; உருக—மனமுருகும்படி.

பக்கம் 16. 'ஊக்கித்தாம்கொண்ட' என்னும் பாட்டு.

ஊக்கி—முயன்று; நிறூஉம்—நிலைக்கச் செய்யும்; உரவோர்—பெரிய அறிவாளிகள்; திருவத்தவர்—கண்டார் விரும்பும் அழகிய தவத்தையுடையவர்.

பக்கம் 25. 'மேவி நிலத்தில்' என்னும் பாட்டு:

மேவி—சென்று; இருக்கும்—உட்காருவான்; ஓவியம்—சித்திரம்; உயிர்ப்பு—மூச்சு; பாவியை—பாவியாகிய சுருசியை; எற்ற—அடிக்க; அலக்கண்—துன்பம்;

பக்கம் 29. 'கோன்நிலை திரிந்திடின்' என்னும் பாட்டு:

கோன்—அரசன்; நிலை—நடுவு நிலைமை; கோள்—கிரகம் (Planet); மாரி—மழை; வறங்கூரும்—குறையும்.

பக்கம் 30. 'காகமோடு' என்னும் பாட்டு:

அலகை—பேய்; துருத்தி—தோற்பை; நவவாசல்—ஒன்பது துவாரங்கள்; காமவேள்—மன்மதன்; மும்மலம்—ஆணவம், கன்மம், மாயை; கேணி—கிணறு; கிருமி—பூச்சிகள்; முடங்கல் ஆர்—நோய் நிறைந்த; மாகம்—ஆகாயம்; இந்திர தனு—வான வில்; வேதமோதிய குலாலன்—பிரமன்; வனைய—செய்ய; வெய்ய—கொடிய; அமலம்—பரிசுத்தம்.

பக்கம் 34. 'மண்டலம் நிறைந்த திங்கள்' என்னும் பாட்டு,

திங்கள்—சந்திரன்; கமலம்—தாமரை; குண்டலம் காதணி; சுடரும் — பிரகாசிக்கும்; குறுநகை — இளஞ்சிரிப்பு; தண்டுழாய் (தண்மை + துழாய்)—குளிர்ச்சி பொருந்திய துளசி; அலங்கல்—மாலை; மறை—வேதம்; கரியவன்—திருமால்.

பக்கம் 35. 'பச்சைமா மலைபோல் மேனி' என்னும் பாட்டு;

மா—பெரிய; மேனி—தேகம்; அச்சுதா—அழியாதவனே! ஆயர்—இடையர்; சுவை—இன்பம்.

பக்கம் 35. 'மனத்திலோர் தூய்மை இல்லை' என்னும் பாட்டு:

தூய்மை—பரிசுத்தம்; சினம்—கோபம்; செற்றம்—பகைமை; விளிவன்—அழிவேன்; வாளா—வீணில்; பொன்னி—காவிரியாறு.

பக்கம் 37. 'திருக்கண்டேன்' என்னும் பாட்டு:

திரு—இலக்குமி; பொன் மேனி—அழகிய தேகம்; திகழும்—விளங்குகின்ற; அருக்கன்—சூரியன்; செரு—சண்டை; கிளரும்—விளங்கும்; ஆழி—சக்கரம்; புரி சங்கம்—வலம்புரி சங்கம் (பாஞ்ச சன்னியம்); ஆழி வண்ணன்—கருங்கடல் போன்ற நிறத்தையுடையவன் (திருமால்).

பக்கம் 38. 'திருமால் கடாட்சமுண்' என்னும் பாட்டு:

கடாட்சம்—கடைக்கண் நோக்கம்; கனதை—பெருமை; பிரதிட்டை—கீர்த்தி.

பக்கம் 39. 'இழந்தமணி புற்றரவு' என்னும் பாட்டு:

அரவு—பாம்பு; பழந்தனம்-பழமையாகிய பொருள்; உயிர்த்த—பெற்ற; உழந்து—வருந்தி.

பக்கம் 41. 'தாமரைத் தடக்கை' என்னும் பாட்டு:

கூப்பி—குவித்து; தடம்—குளம், பரிதி—சூரியன்; தாமரைக் குணத்தினை—எண்ணற்ற நற்குணங்களை

யுடைய துருவனை (தாமரையென்பது இங்கு எண்ணலள வைப் பொருளது); பரிவு—துன்பம்.

பக்கம் 41. 'மார்பினும் அகன்ற' என்னும் பாட்டு :

சீர்த்தி—புகழ்; தெரியல்—பூமாலை; கொற்றம்—வெற்றி; வாய்மை—உண்மை; வண்மை—தருமம்.

பக்கம் 46. 'தாயோக்கும் அன்பில்' என்னும் பாட்டு :

பயப்பின்—கொடுப்பதில்; கதி—வழி; உய்க்கும் நீரால்—செலுத்துந் தன்மையால்; சேய்—புத்திரன்; நுணங்கு—நுட்பமான; ஆய—ஆராய்ந்து பார்க்க.

பக்கம் 51. 'வானின் றிழிந்து' என்னும் பாட்டு :

விழிநீர்—கண்ணீர்; ஊன்—தசை; வெம்பு—சுடுகின்ற; தழல்—நெருப்பு; உயங்கி—வாடி; விதியார்—பிரமதேவர்.

பக்கம் 51. 'கனமும் தருக்கள்' என்னும் பாட்டு :

கனம்—மேகம்; தரு—கற்பக விருக்ஷம்; வரம்—மார்பு; சிகை—முடி.

பக்கம் 52. 'மறந்தும் பிறன்கேடு' என்னும் பாட்டு :

பிறன் கேடு—மற்றவனுக்குக் கெடுதியைத் தருங் காரியத்தை; சூழற்க—எண்ணுதிருக்கக் கடவன்; அறம்—தரும தேவதை; சூழும்—எண்ணும்.

பக்கம் 53. 'கூடப் பிறந்தவர்க்கு' என்னும் பாட்டு :

கோது + இல் — குற்றமில்லாத; தீது + இல் — கெடுதியில்லாத; சீவன்—உயிர்; சீறு—கோபிக்கின்ற; மணிவாய்—மாணிக்கத்தையுடைய வாய், அல்லது அழகிய வாய்; சகோதரர்—(சக+உதரர்) உடன் பிறந்தவர்கள்.

# வசன அரும்பத அகராதி

அட்டி—தடை
அடவி—காடு
அந்தப்புரம்—பெண்கள் வசிக்குமிடம்
அந்தோ—ஐயோ
அமளி—படுக்கை
அமைச்சர்—மந்திரிகள்
ஆதனம்—இருக்கை (Seat)
இயக்கன்—யக்ஷன்
இருக்கை—பீடம்
இருத்தி—உட்காரச் செய்து
இல்—வீடு
இலக்கு—குறி
இழுக்கல்—தவறுதல்
இன்றியமையாத—முக்கிய [மான
இன்னல்—துன்பம்
ஈறு—முடிவு
உடையுழி—உண்டானபோது
உதிரம்—இரத்தம்
உரிமை—சொந்தம்
உவகை—சந்தோஷம்
உளைந்து—வருந்தி
உன்னி—நினைத்து
ஊசல்—ஊஞ்சல்
ஊழ்—விதி
ஊற்றுக்கோல்—ஊன்று கோல்
ஐம்பொறி—மெய், வாய், கண், மூக்கு, செவி
கட்கம்—வாள்
கடந்த மக்கள்—உலகப்பற்றை விட்ட தவசிகள்
கண்ணோட்டம்—கருணை
கப்பம்—பகுதிப் பணம்
கபோலம்—தாடை
கமலை—இலக்குமி
கமுகு—பாக்கு மரம்
கழிபெருந்துன்பம்—மிகவும் பெரிய துக்கம்
களம்—இடம்
காட்சி—தோற்றம்
குதூகலம்—சந்தோஷம்
குறுநடை—தளர் நடை
கேசம்—மயிர்
கேளிக்கை—விளையாட்டு
கொழு கொம்பு—கொடி ஏறிப்படரும் கொம்பு
கொழுனன்—கணவன்
கொள்ளி—நெருப்புக் கட்டை
கோதண்டம்—வில்
சகக்களத்தி—கணவனுக்கு அமைந்த வேறு மனைவி
சஞ்சாரர்—திரிபவர்
சடங்கு—செய்முறை
சலதி—கடல்
சிகாமணி—உயர்ந்தவன்
சிங்காதனம்—சிங்கம் போன்ற உருச் சுமக்கும் நாற்காலி
சிலதி—தோழி
சிவிகை—பல்லக்கு
சீற்றம்—நீங்காக் கோபம்
சுண்ணம்—சாந்து
செண்டு—பந்து
தயங்க—விளங்க
திட்பம்—உறுதி
திரணம்—துரும்பு
திரிலோகம்—மூவுலகம்: [சுவர்க்கம், மத்தியம், பாதாளம்]
திருப்புண்டரம்—நாமம்
திருமால்—மகாவிஷ்ணு

திருமுகம்—கடிதம்
திருஷ்டி—பார்வை
திரை—அலை
திவ்விய—தெய்வத்தன்மை வாய்ந்த
திறை—வரி (Tax)
துவாதசாக்கர மந்திரம்—(துவம் + தசம் + அக்கரம் = 2 + 10 = 12) 12 எழுத்துகளாலாகிய மந்திரம்
நாகணவாய்ப்புள்—மைனு
நாட்டம்—விருப்பம்
பண்பு—குணம்
பரணி—போரில் ஆயிரம் யானைகளைக் கொன்ற ஒரு வீரனைத் தலைவனாகக் கொண்டு புலவர் பாடும் ஒரு பிரபந்தம்
பரதம்—நடனம்
பரந்து—விரிந்து
பரிசில் } வெகுமதி
பரிசு }
பற்று—ஆசை
பாடல் மகளிர்—பாடும் பெண்கள்
பார்த்திபன்—அரசன்
பாவை—பொம்மை
பிறழ்ந்து—தவறி
புடை—பக்கம்
புணை—தெப்பம்
புலன்—அறிவு
புனிதவதி—பரிசுத்தை
புன்முறுவல் } இளஞ்சிரிப்பு
புன்னகை }
பேதித்து—வேறுபடுத்தி
பேதைமைத்து—அறியாமையை உடையது
பேழை—பெட்டி
பொலிவு—அழகு
மகபதி—அரசன்
மகிபன்—அரசன்
மணாளர்—கணவர்
மயிர்க் கூச்செரிதல்—மயிர் சிலிர்த்தல்
மரக்கலம்—கப்பல்
மரவுரி—நாரினலாகிய சீலை
மருந்து—தேவாமுதம்
மரை—ஒரு வகை மான்
மல் யுத்தம்—கைச்சண்டை
மழலை—திருந்தாத சொல்
மறை—வேதம்
மாதவர்—முனிவர்
மாந்தர்—மனிதர்
மாயவர்—மகாவிஷ்ணு
மாலுமி—கப்பலோட்டி
மாறுபாடு—வித்தியாசம்
முக்குறும்பு—முக்குற்றம்: ஆணவம், கன்மம், மாயை
முடிசூட்டு—பட்டாபிஷேகம்
முதுமொழி—பழமொழி
முரசு—ஒருவகை வாத்தியம்
முன்றானை—புடைவையின் முகப்பு
மொட்டு—மொக்கு
வரம்பு—அளவு
வல்லியல்—கொடுங்குணம்
வலம்புரிசங்கம்—வலப்பக்கமாக முறுக்கியுள்ள சங்கு
வள்ளல்—கொடுப்பவன்
வள்ளுவர்—பறையையடிப்பவர்
வறியவர்—தரித்திரர்
வாஞ்சை—ஆசை
விண்—ஆகாயம்
விந்தை—அற்புதம்
விபரீதம்—ஒழுங்கீனம்
விமரிசை—ஒழுங்கு
விலங்கு—மிருகம்

பொழில்—சோலை
மக்கள்—மனிதர்கள்; பிள்ளைகள்
வினை—செயல்
வீழ்த்தும்—தள்ளும்
வெருண்டு—பயந்து

## உரிமையுரை

சீர்பெற் றுயர்ந்த செந்தமிழ்ச் சுவையைப்
பார்மீ தெனக்குப் பண்மி னெடுத்துக்
காட்டி யருளிய கண்ணிய னே! புகழ்
ஈட்டிய சேடா சலன் எனும் பெரியோய்!
அத்தகு தமிழில் அன்புடன் எனக்கிங்
கொத்தநல் லுதவியா யுற்ற இராம
இரத்தினம் என்னும் இன்மொழிப் புலவ!
வரத்தின் உயர்ந்த வல்லனுந் துருவன்
திருத்தகு நற்கதை தனைத்தீத் தமிழிற்
பொருத்த முறும்படி யுணர்த்தினே னிதனைச்
சிறுவன் செய் கைம்மா றெனவே
உறுகளிப் புடனீர் உரிமைகொள் வீரே.

AGR
316